Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :222 ஆனி 24ஆம் நாள் புதன்கிழமை 08 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## வெலிக்கடைச் சிறையில் கைதிக்குக் கொரோனா

### 624 பேரில் 210 பேருக்கு பி.சி.ஆர். சோதனை

கொழும்பு, ஜூலை 8

கொழும்பு, வெலிக்கடை சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. 22

# கோகண்ண விகாரையே கோணேச்சரம் கோவில்!

### கோத்தாவின் செயலணி உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் 'கண்டுபிடிப்பு'!

கொழும்பு, ஜூலை 8

திருகோணமலையில் அமைந்துள்ள பாடல்பெற்ற தலமான திருக்கோணேச்சரம் கோவில் என்பது கோகண்ண விகாரை என்றே கூறப்படுகின்றது. இதற்காக நாம் கோவிலை இடித்து விகாரை கட்டமாட்டோம். ஆனால், அந்தப் பகுதியில் பௌத்தர்களுக்குரிய தொல்பொருள்கள் இருந்தால் அவை பாதுகாக்கப்படவேண்டும். இதனைச் செய்தாலே போதும்.

இவ்வாறு ஜனாதிபதி கோத்தா 22

# ஆளும் கட்சியினருக்கு ஆதரவாக இராணுவம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூலை 8**

**வடக்கில் தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களைக் குறிவைத்து அரச படைகள் மேற்கொண்டுவரும் அச்சுறுத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் தேர்** 21

## டக்ளஸின் கோரிக்கையை உதறித் தள்ளினார் கோத்தா

### பெரும்பான்மை இனத்தவருடன் மட்டும் கிழக்குத் தொல்பொருள் செயலணி

கொழும்பு, ஜூலை 8

கிழக்கு மாகாணத் தொல்பொருள் செயலணியின் உறுப்பினர்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது. அந்தச் செயலணியில் சிறுபான்மையினர் எவரையும் 22

## தமக்கே வாக்களிக்க முடியாத யாழ்ப்பாண வேட்பாளர்கள்!!!

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களில் சிலர் தமக்கே வாக்களிக்க முடியாத நிலையில் உள்ளனர். தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் முதன்மை வேட்பாளரும் முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட 4 பேர் இவ்வாறு வாக்களிக்க முடி 21

**தேர்தலில் இராணுவத் தலையீடு:**

## தமிழ் அரசியல்வாதிகள் பொய்க் குற்றச்சாட்டு!

### இராணுவத் தளபதி சீற்றம்

கொழும்பு, ஜூன் 8

வடக்கில் தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களை அச்சுறுத்தும் வகையில அரச படைகள் செயற்படவில்லை. பொதுத்தேர்தலில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்கள் உட்பட தமிழ் அரசியல்வாதிகள் ஆதாரங்கள் எதுவுமில்லாமல் படையினர் மீது 22



## சமுர்த்தி அலுவலர் வீடு மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 8

கோண்டாவில் கிழக்கு ஞானவைரவர் ஒழுங்கையில் அமைந்துள்ள சமுர்த்தி அலுவலரின் வீடு மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு தாக்குதல் நடத்தியுள்ளனர். 22

## ஆயுதங்களுடன் நடமாடிய ஏழு பேர் படையினரிடம்!

கொடிகாமம், ஜூலை 8

தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வரணிப் பகுதியில் ஆயுதங்களோடு நடமாடினர் என்ற குற்றஞ்சாட்டில் 7 பேரை இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் நேற்று அதிகாலை ஒரு 22

## மர்ம விலங்கு கடித்து 10 ஆடுகள் பரிதாபச் சாவு

### சிறுத்தையா எனச் சந்தேகம்



தெல்லிப்பழை, ஜூலை 8

கொல்லங்கலட்டி மாவைகலட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை மர்ம விலங்கின் தாக்குதலுக்கு இலக்காகி 10 ஆடுகள் உயிரிழந்துள்ளன. மேலும் 4 ஆடுகள் ஆபத்தான நிலையில் உள்ளன. அதே இடத்தைச் சேர்ந்த வல்லி பரராசசிங்கம் என்பவர் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கும் ஆடுகளே தாக்குத 21

## நவாலி நினைவேந்தலை தடுப்பதற்கு பிரயத்தனம்

### பொலிஸாரின் மனு இன்று பரிசீலனை

யாழ்ப்பாணம், ஜூலை 8

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலய படுகொலை நினைவேந்தல் நிகழ்வில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் பொதுமக்கள் பங்கேற்கத் தடைவிதிக்கக் கோரி மானிப்பாய் பொலிஸார் விண்ணப்பம் தாக்கல்செய்துள்ளனர். அது விண்ணப்பம் இன்று 22

## யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் ரி.ஐ.டியால் இருவர் கைது

கிளி., ஜூலை 8

பளை இயக்கச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற உள்ளூர் தயாரிப்பான குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர் 22

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ 57,000/-

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

செலான் தங்க நகை

011 200 88 88

செலான் வங்கி




# ஹொட்டல் உரிமையாளர் கொலை: மனைவி காயம்

கொழும்பு, ஜூலை 8
பிலியந்தலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெஸ்பேவ, குருகம்மான வீதியில் ஹொட்டல் உரிமையாளர் கொல்லப்பட்டுள்ளார். அவருடைய மனைவி படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் கொலை இடம் பெற்றுள்ளது என்று பிலியந்தலை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கிடைத்துள்ளது. பொலிஸார் அங்கு சென்றபோது ஹொட்டல் உரிமையாளர் சடலமாகக் காணப்பட்டார். அவருடைய தலையின் பின்புறம் அடிகாயம் காணப்படுகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)



# கொரோனா 2081

கொழும்பு, ஜூலை 8
நாட்டில் மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எத்தியோப்பியாவிலிருந்து நாடு திரும்பி தனிமைப் படுத்தப்பட்ட ஒருவருக்கும் விமானப்படையை சேர்ந்த ஒருவருக்குமே இவ்வாறு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மூவர் நேற்று மட்டும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய நாட்டில் இது வரை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 81 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான ஆயிரத்து 955 பேர் குணமடைந்து வீடுதிரும்பியுள்ள நிலையில் 115 பேர் தொடர்ந்தும் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, 35 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். 11 பேர் உயிரிழந்துள்ளனர். (எ)

# வெளிமாவட்ட மீனவர் வருகையால் பதற்றம்!

கொடிகாமம், ஜூலை 8
வடமராட்சி, உடுத்துறையை அண்டிய கடற்பரப்பில் மீனவர்களிடையே ஏற்பட்ட முரண்பாட்டால் நேற்றிரவு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அந்தப் பகுதிக் கடற்பரப்பில் வெளி மாவட்ட மீனவர்கள் சட்டவிரோதமான முறையில் ஆயிரம் கிலோவுக்கும் அதிகமான எடையுடைய மீன்களைப் பிடித்தனர் என்றும், அந்தப் பகுதி மீனவர்கள் அது தொடர்பாகக் கேள்வி எழுப்பிய போது இரு தரப்பினருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

அதையடுத்து அந்தப் பகுதிக்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-159.26)

# சூக்காவுடன் முரண்டுபிடிக்கும் இலங்கைக்கு வலுக்கிறது எதிர்ப்பு

## 60க்கும் மேற்பட்ட மனித உரிமை அமைப்புகள் ஒன்றிணைந்து கடிதம்

கொழும்பு, ஜூலை 8
**யஸ்மின் சூக்காவுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை சர்வதேசக் கொள்கைகளை மீறுவதாக உள்ளது. இலங்கையில் நிலவும் நீண்டகால அநீதி மற்றும் தண்டனையிலிருந்து தப்பித்தல் ஆகியவற்றிலிருந்து சர்வதேச சமூகத்தைத் திசைதிருப்புவதற்கான மற்றுமொரு முயற்சியாகவும் அமைந்திருக்கிறது.**

இவ்வாறு சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கடுமையாகச் சாடியுள்ளன. சூக்காவுக்குத் தமது ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளன.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளரும், சட்டத்தரணியுமான யஸ்மின் சூக்காவுக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் இழிவுபடுத்தல்கள் என்பவற்றைப் புறக்கணித்து சூக்காவுக்கு ஆதரவாக 60க்கும் மேற்பட்ட மனித உரிமை அமைப்புக்களும் 180 தனிநபர்களும் கையெழுத்திட்டு கடிமொன்றை வெளியிட்டிருக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட நபர்களின் சார்பில் செயற்பட்டுவந்த யஸ்மின் சூக்காவின் பணிகளை அடிப்படையாகக் கொண்டு, அவர் அரசுக்கு எதிராக சதி செய்தார் என்று இலங்கைப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேவால் முன்வைக்கப் பட்ட குற்றச்சாட்டு மற்றும் சட்ட நடவடிக்கையை அடுத்தே சூக்காவுக்கு ஆதரவாகப் பலர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

மனித உரிமை அமைப்புக்களும், தனிநபர்களும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யஸ்மின்சூக்காவுக்குஎதிராகஇலங்கை அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ள நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். இத்தகைய குற்றச்சாட்டுக்கள், உலகளாவிய ரீதியில் நீண்டகாலமாக மனித உரிமைகள் பாதுகாவலராகவும் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தரணியாகவும் செயற்பட்டுவரும் அவருடைய கௌரவத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இலங்கையில் இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படல் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவதற்கான மூவரடங்கிய குழுவில் ஒருவராக கடந்த 2010 ஜூலை மாதம் யஸ்மின் சூக்கா நியமிக்கப்பட்டார் என்றும், சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டத்தில் இலங்கைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளராகப் பணியாற்றுகிறார்.

யஸ்மின் சூக்காவின் மீது இலங்கை அரசாங்கத்தால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அவர் மீதும், அவரது அமைப்பின் மீதும், மனித உரிமைகள் சமூகத்தின் மீதுமானது மாத்திரமல்ல. மாறாக அவரது பணியுடன் தொடர்புபட்ட பாதிக்கப்பட்ட நபர்கள் மீதானதுமாகும். இலங்கையிலுள்ள பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு என்பவற்றை முன்நிறுத்தி செயற்பட்ட அவருக்கெதிரான தாக்குதல்கள் எமக்குப் பெரும் விசனத்தை ஏற்படுத்துகின்றன.

சூக்காவுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை சர்வதேசக் கொள்கைகளை மீறுவதாக அமைந்திருக்கும் அதேவேளை, இலங்கையில் நிலவும் நீண்டகால அநீதி மற்றும் தண்டனையிலிருந்து தப்பித்தல் ஆகியவற்றிலிருந்து சர்வதேச சமூகத்தைத் திசைதிருப்புவதற்கான அரசாங்கத்தின் மற்றொரு முயற்சியாகவும் இருக்கிறது.

ஆகவே பொறுப்புக்கூறலை நிலைநாட்டும் நோக்கத்திற்காகத் தொடர்ந்து பாடுபடுபவர்களுக்குத் தொடர்ந்து அச்சுறுத்தலை ஏற்படுத்தி, அவர்களைக் கீழ்நிலைக்கு உட்படுத்தாமல் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டும்- என்றுள்ளது. (எ)

# போதைப்பொருள்களுடன் உரும்பிராயில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 8
உரும்பிராயில் கஞ்சா மற்றும் 'சாதா' வகை போதைப் பொருள்களை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

உரும்பிராயில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது ஓர் இளைஞரை சோதனையிட்டுள்ளனர். அதன் போதே அவரிடமிருந்து 4 கிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். கோப்பாய் தெற்கைச் சேர்ந்த 28 வயதுடையவரே கைதானார்.

இதுதவிர, உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் 'சாதா' என்ற போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பிறிதொரு இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-20)

# ஒரே வீட்டின் மீது தாளையடியில் கும்பல் ஒன்று தொடர் தாக்குதல்

## தவிக்கின்றது அந்த வீட்டிலுள்ள குடும்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமராட்சி கிழக்கு தாளையடி வத்திராயனில், நேற்றுமுன்தினம் இரவு வீடு ஒன்றின் மீது நால்வர் கொண்ட கும்பல் பெரிய கற்களை வீசி கூரைகளை சேதமாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கஞ்சா போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் நபர்களே அவர்கள் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்படும் சந்தேகநபர்கள் முன்னரும்அதே வீட்டுக்காரருடன் முரண்பட்டிருந்தனர் என்றும் அந்த வீட்டுக்குள் புகுந்து மேசை, கதிரை உள்ளிட்ட பொருள்களை அடித்துச் சேதப்படுத்தியிருந்தனர் என்றும் அந்தக் குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர் என்றும் பாதிக்கப்பட்ட தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், பிணையில் வெளியே வந்திருக்கும் நபர்களே மீண்டும் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் பொலிஸார் நேற்று விசாரணை நடத்தியிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் இத்தகைய செயல்களால் அந்தக் குடும்பத்தினர் அங்கு வாழமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் எனவே, அந்த தாக்குதல்தாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் கோருகின்றனர். (த)

# இந்தியாவின் துணையோடு நாட்டைப் பிரிக்க முயற்சி!

## குணதாச அமரசேகர குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூலை 8**

**பிரிவினைவாத அரசியல் ஊடாக இனியும் நாட்டைப் பிளவுபடுத்த முடியாது என்பது சம்பந்தனுக்கு தெரியும். அதன்காரணமாகவே இந்தியா ஊடாகத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சிக்கின்றார். அந்த முயற்சியும் கைகூடாது.**

இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

அரசியல் தீர்வைப்பெறுவதற்கு தமது பக்கம் இந்தியா உட்பட சர்வதேச சமூகம் நிற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வெளியிட்டுள்ள தகவல் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து இலங்கையில் அரசியல் செய்கின்றன என்ற கருத்து உண்மைதான். அதற்கு இடமளிக்கக்கூடாது. அவ்வாறு நடைபெற்றால் அது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தக்கூடும்.

உள்நாட்டில் அரசியலை முன்னெடுத்து இலக்கை அடையமுடியாது என்பது சம்பந்தனுக்கு தெரியும். இதன்காரணமாகவே இந்தியாவின் கோரிக்கைக்கமைய செயற்பட முயற்சிக்கின்றனர். கடந்த காலங்களிலும் கூட்டமைப்பினர் இதனையே செய்தார்கள். ஆரம்பத்தில் பிரபாகரன் ஊடாக நாட்டைப் பிரிப்பதற்கு முயற்சித்தனர். தற்போது இந்தியாவையும் இணைத்துக் கொண்டு அரசமைப்பு ரீதியில் நாட்டைப் பிரிப்பதற்கு பார்க்கின்றனர். இதனைத் தடுப்பதற்காகவே கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கினோம்.

தற்போதைய சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியினரும் கோத்தாபயவுக்கே வாக்களிப்பார்கள். எனவே, சம்பந்தன் தரப்பின் முயற்சி கைகூடாது.

இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து சீனாவுக்கு எதிராக எம்மைப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன. இங்கு இனப்பிரச்சினை அல்ல, சீனப்பிரச்சினை இருப்பதாலேயே உள்விவகாரங்களில் தலையிடுகின்றன. மாறாக தமிழ் மக்கள் மீதுள்ள அக்கறையால் அல்ல. அதேபோல் இந்தியாவுக்கு தேவையானவற்றை இங்கு செய்யமுடியாது. அதற்கு இடமளிக்கப்படவும் கூடாது-- என்றார்.

(ஒ,5,44)




# கொக்கிளாயிலேயே இனிமேல் இல்மனைற்

## 45 ஏக்கரில் அகழ்வுப் பணிகள் ஆரம்பம்

திருகோணமலை- முல்லைத்தீவு எல்லைப் பகுதியில் திருகோணமலை மாவட்டத்துக்குரிய புல்மோட்டைப் பிரதேசத்தில் இல்மனைற் அகழ முடியாது என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குச் சொந்தமான கொக்கிளாய் பகுதியில் இல்மனைற் அகழ்வுச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 3 இடங்களிலிருந்து மணல் எடுக்கப்பட்டு, கனியவள ஆய்வுத் திணைக்களத்தால் 2016ஆம் ஆண்டு ஆய்வு செய்யப்பட்டது. மணலில் 21 சதவீதத்துக்கு குறையாத இல்மனைற் காணப்பட்டால் அந்தப் பகுதியில் இல்மனைற் அகழ்வைத் தொழிலாகத் தொடர முடியும். திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டைப் பிரதேசத்தில் 18 தொடக்கம் 28 சதவீதம் வரையில் காணப்படும் நிலையில், முல்லைத்தீவிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மணலில் 16 தொடக்கம் 26 சதவீதம் வரையில் இல்மனைற் காணப்பட்டுள்ளது. இதில் கொக்கிளாய்ப் பிரதேசத்திலிருந்து எடுக்கப்பட்ட மணலிலேயே அதிகளவு இல்மனைற் காணப்பட்டுள்ளது.

இதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் 2017 ஆம் ஆண்டு கனியவளத் திணைக்களம், பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலர் இடையிலான கலந்துரையாடலில் நிபந்தனைகளின் அடிப்படையில் இல்மனைற் அகழ்வுக்கான அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இல்மனைற் அகழ்வு முன்னெடுப்பதால் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது. மணலையும், இல்மனைற்றையும் பிரிக்கும் பணி அந்தப் பகுதியிலேயே முன்னெடுக்கப்பட வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை, கனியவளத் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் மாதம் ஒருமுறை இடத்தை நேரடியாகப் பார்வையிட்டு அறிக்கையிட வேண்டும். மக்களால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டால் பிரதேச செயலர் நேரில் சென்று பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும். மாவட்டத்தைச் சேர்ந்த அல்லது அதே மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் தொழிற்சாலைக்கு பணிக்கு அமர்த்தப்படவேண்டும். இல்மனைற் தொழிற்சாலையால் சுற்றுச் சூழல் பாதிப்புக் கண்டறியப்பட்டால் தொழிற்சாலை உடனடியாக மூடப்படவேண்டும். இல்மனைற் பிரிப்புக்காக மணல் அகழப்பட்டால் அந்தக் கிடங்கை மூடிய பின்னரே புதிய இடத்தில் தோண்ட முடியும். தொழிற்சாலை ஊடாகக் கிடைக்கும் இலாபத்தில் 30 சதவீதம் மாவட்டத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். இவை உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், கொக்கிளாய் பிரதேசத்தில் 45 ஏக்கர் நிலம் இல்மனைற் அகழ்வுக்காக அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்தக் காணி தனியாருக்குச் சொந்தமானது என்று அடையாளப்படுத்தப்பட்டபோதும் உரிமையாளர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. இதன் காரணமாக, காணி சுவீகரிப்பு நடைமுறைக்கு அமைவாக அந்தக் காணிக்குரிய இழப்பீட்டுப் பணம் கரைதுறைபற்று பிரதேச செயலகத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. (ஒ,5)

# உயர்தர மாணவர் இரட்டிப்பான வரவு!

யாழ்ப்பாணம், ஜூலை 8

வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 57 சதவீதமானோர் பாடசாலைகளுக்கு நேற்று வருகை தந்தனர் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் 25 சதவீத மாணவர்களே வருகை தந்திருந்த நிலையில் நேற்று இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

அதேவேளை, இந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 79 சதவீதமானோர் நேற்று வருகை தந்துள்ளனர். தரம் 5 மாணவர்கள் 70 சதவீதமானோர் பாடசாலைக்கு நேற்று வருகை தந்தனர் என்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது. (ஒ,5)

# படையினரைத் தாக்கினர் என இருவருக்கு மறியலில்

முல்லைத்தீவு, ஜூலை 8

விமானப் படையினர் மீது தாக்குதல் நடத்தினர் என்று இளைஞர்கள் இருவர் மீது விமானப்படையினர் குற்றஞ்சாட்டினர். அதனால் முள்ளியவளைப் பொலிஸார் இளைஞர்கள் இருவரையும் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத்தளத்தைச் சேர்ந்த விமானப் படையினர் இருவர் சூரிபுரம் கிராமத்துக்குச் சென்றபோது அங்குள்ள இளைஞர்கள் இருவர் தாக்கினர் என்று விமானப் படையினர் பொலிஸில் முறையிட்டனர்.

தாக்குதலில் 35 வயதுடைய விமானப் படைச் சிப்பாய் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதனையடுத்து கைதான இளைஞர்கள் முல்லைத்தீவு நீதிவான் மன்றில் முற்படுத்தப் பட்டனர். அதன்போதே அவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (த-ஒ,5,19)

# விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் வீதியில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

நாவலர் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை குகேந்திரன் (வயது-62) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நல்லூர் கோயிலைக் கும்பிடுவதற்காக கோயில் வீதியால் பயணித்துள்ளார். முன்னே சென்ற கார் வீதியில் திடீரென நிறுத்தப்பட்டு, சாரதி கதவைத் திறந்துள்ளார். இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர், கார் கதவுடன் மோதுண்டு வீதியில் வீழ்ந்தார். அவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய காரின் உரிமையாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் சகோதரர் தி.பரமேஸ்வரன் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ,5,26)

# மஹிந்தவின் கருத்து தொடர்பிலும் ஆணைக்குழு விசாரிக்கவேண்டும்

## சம்பிக்க ரணவக்க வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 8

அடிப்படைவாதிகளுக்கு தமது அரசாங்கத்தில் புலனாய்வுப் பிரிவினர் ஊடாகச் சம்பளம் வழங்கப்பட்டது என்பதை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார். இவ்விடயம் தொடர்பிலும் உரிய விசாரணைகளை ஆணைக்குழு முன்னெடுக்க வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

முஸ்லிம் அடிப்படைடைவாதம் தீவிர வாதத்தை நோக்கிச் செயற்படுகிறது என்ற தகவல் மிகத் தெளிவாக முற்பட்ட காலங்களில் பாதுகாப்பு அமைச்சுக்கு கிடைத்துள்ளது. அதே போன்று கடந்த வருடம் ஐந்தாம் மாதம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பேராதெனிய ரஜோ பவனராம விகாரைக்குச் சென்றிருந்த வேளை கெப்படியாகொட ஸ்ரீ விமல தேரருடன் ஆற்றிய உரை தொடர்பிலும் அங்கு அவர் ஏற்றுக்கொண்டார். இந்தஅடிப்படைவாதிகளுக்குஅரசாங்கம் புலனாய்வுப் பிரிவினர் ஊடாகச் சம்பளம் வழங்கி இரகசியத் தகவல்களைப் பெற்றுக் கொண்டதா?. அவ்வாறாயின் அந்த அடிப்படைவாதி தரப்பினர் யார், எந்த நபர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொண்டார்கள், இவர்களிடமிருந்து தாக்குதல் தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெறவில்லையா, அவ்வாறு இல்லாவிடின் அவர்கள் குண்டுத் தாக்குதலுடன் சம்பந்தமில்லையா, உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் விசேட விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன். அடிப்படைவாத தீவிரவாதிகளுடன் அரசியல் தரப்பினரும், வியாபாரத் தரப்பினரும், குறுகிய அ ரசியல் நோக்கங்களுக்கு அப்பாற் சென்று தொடர்பு கொண்டுள்ளார்கள் என்பதை நாட்டு மக்களுக்கு தெரிவித்துக் கொள்ள வேண்டும். அனைத்து உண்மைகளையும் ஆணைக்குழு பகிரங்கப் படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## சிறுமி துன்புறுத்தல்; சிறுவன் கைது

கொழும்பு, ஜூலை 8

10 வயதுச் சிறுமியை 15 வயது சிறுவன் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளான். பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினரான 65 வயது முதியவரையும் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நிகவரெட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றி வருகிறார். குறித்த சிறுமி தனது தந்தை மற்றும் 16 வயதான சகோதரியுடன் வசித்து வருகிறார்.

தந்தை மற்றும் சகோதரி ஆகியோர் வீட்டில் இல்லாத சந்தர்ப்பங்களில் கடந்த ஒரு வருட காலமாக உறவினரான முதியவரும், குறித்த சிறுவனும் சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தி வந்துள்ளமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## குற்றச்செயல்கள்; 1,747 பேர் கைது

கொழும்பு, ஜூலை 8

நாட்டில் 24 மணி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட 1,747 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சுற்றிவளைப்பு கடந்த 5 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி தொடக்கம் 6 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது போதைப்பொருள், ஆயுதங்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 310 பேரும், ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் 252 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 183 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 5பேரும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சசிகலாவுக்கு வாக்களிக்க விஜயகலா கோரிக்கை!

ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள பெண்களும், எனக்கு வாக்களிக்காமல் விட்டால், அமரர் ரவிராஜினுடைய மனைவிக்கு வாக்களிக்கும்படி கேட்டு கொள்கிறேன் என்று கல்வி இராஜாங்க முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட முதன்மை வேட்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அமரர் ரவிராஜினுடைய மனைவி சசிகலாவின் அரசியல் பிரவேசத்தை நான் வரவேற்கின்றேன். அவருடைய கணவனுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை. நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் முடக்கப்பட்டுள்ளன. அதனால் சசிகலா மன அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளார். சசிகலா தான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் ஊடாக நாடாளுமன்றம் செல்ல வேண்டும். பெண்கள் எனக்கு கட்டாயம் வாக்களிக்கவும். அவ்வாறில்லாமல் ஏனைய கட்சிகளுக்கு வாக்களிக்க முடிவு செய்தால் அமரர் ரவிராஜினுடைய மனைவிக்கும் வாக்களிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நாடாளுமன்றத்தில்பெண்களின்பிரதிநித்துவம்அதிகரிக்கவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீடைக் கொண்டுவந்திருந்தோம். அதன் மூலம் பிரதேச சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கக் கூடியதாக இருந்தது-என்றார். (ப-159,2)

## சாக்கடை அரசியலைச் சுத்தப்படுத்த இளைஞர் களத்தில் இறங்கவேண்டும்

நுவரெலியா, ஜூலை 8

மலையகத்தில் குறைகூறும் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். சாக்கடை அரசியலை சுத்தப்படுத்துவதற்காக இளைஞர்கள் களத்தில் இறங்க வேண்டும். அரசியலில் நடிப்பவர்களுடன் இணைந்து செயற்பட முடியாது. அடிமட்டத் தொண்டர்களுக்காக காங்கிரஸின் கதவு திறந்தே உள்ளது. நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்குவதற்கு கம்பனிகள் இணக்கம் தெரிவித்துவிட்டன. ஆனால் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த நிபந்தனைகளை எம்மால் ஏற்கமுடியாது. மூன்று மாதங்களுக்கு100 ரூபாகொடுப்பனவை வழங்கினர். இதனால் நிலுவைச் சம்பளத்தை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே நாம் நிபந்தனைய ஏற்று கையொப்பமிட்டால் இவர்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். கடந்த நான்கு வருடங்களாக ஆயிரம் ரூபா பற்றி மட்டுமே கதைத்தார்கள். இவ்வாறு கதைத்து ஏனைய பிரச்சினைகளை மூடிமறைத்து விட்டனர். ஆயிரம் ரூபா வைத்தவிர எமக்கு வேறு பிரச்சினைகள் இல்லையா? இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு இருக்கின்றதா? இல்லை. கேட்டால் வீடு கட்டிக்கொடுத்தோம் என்கின்றனர். வேலையின்மை பிரச்சினைக்கும் வீட்டுப்பிரச்சினைக்கு இருக்கும் தொடர்புதான் என்ன?

அப்பா உயிருடன் இருக்கும்போது அவரின் பெயரைப் பயன்படுத்தியே அரசியல் செய்தனர். அவர் பாவம். இரண்டு மாதங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். ஆனால் இன்னும் அவரை வைத்து அரசியல் செய்யப் பார்க்கின்றனர். அப்பாமீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் போலியானவை என்பது உறுதியாகிவிட்ட நிலையில் இப்போது என்னை விமர்சிக்க ஆரம்பித்து விட்டர். மலையக அரசியல்வாதிகள் எப்போது ஒன்றிணைந்து செயற்படுகின்றார்களோ அன்றுதான் மலையகம் முன்னேறும். இதுதான் உண்மையான விடயம் - என்றார். (ப-150)

## வடமாகாண சபையில் இடம்பெற்ற ஊழல்களுக்கு விக்கியே பொறுப்பு

### கணேஷ் வேலாயுதம் தெரிவிப்பு

கொடிகாமம், ஜூலை 8

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த சி.வி. விக்னேஸ்வரன் மாகாண சபைகளில் இடம்பெற்ற ஊழல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற வேட்பாளர் கணேஷ் வேலாயுதம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தனது பிரசாரக் கூட்டமொன்றில் ஆயுதக் குழுக்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்த முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தான் போட்டியிடுகின்ற கட்சியில் போட்டியிடும் ஏனைய ஆயுதக் குழு வேட்பாளர்கள் தொடர்பில் அறியாமல் விமர்சிப்பது வேடிக்கையாகும். 1986 ஆம் ஆண்டு திம்புப் பேச்சு வார்த்தையின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற மாகாணசபை முறைமையைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இருக்கும் அதிகாரங்களைக் கூட உரிய முறையில் பயன்படுத்தத் தெரியாமல் வடக்கின் கல்வியை சீரழித்தனர். அதுமட்டுமல்லாது விக்னேஸ்வரன் முதலமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் இடம்பெற்ற நெல்சிப் ஊழல் மோசடி, இரணைமடு ஊழல் மோசடி மற்றும் சுன்னாகம் கழிவு ஒயில் விவகாரம் ஆகியவற்றுக்கு உரிய முறையில் தீர்வு காணாது அவர் இழுத்தடிப்புச் செய்தார். ஆகவே வடக்கு மாகாண சபையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை மூடிமறைத்து காலதாமதப்படுத்திய விக்னேஸ்வரன் போன்றோர் தமிழ் மக்களுக்காக தலைமை ஏற்றுச் செயல்படப் போகிறோம் எனக் கூறுவது வேடிக்கையாகும் - என்றார். (ப-159)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# துரோக அரசியலும் இன ஒடுக்குமுறையும்

ஜீ.ஜீ.பொன்னம்பலம், அல்பிரட் துரையப்பா, ஹமீத் மௌலானா பதியுதீன் மஹ்மூத் போன்ற தமிழ் முஸ்லிம் தலைவர்கள் பெரும்பான்மை சமூகத்துக்கே நன்மைகளைச் செய்தார்களே தவிர, தமது சொந்த இனத்துக்காக எவ்விதத்திலும் அவர்கள் அரசியல்ரீதியாகப் போராடத்துணியவில்லை. ஆனால் அதிகாரத்தில் உள்ளோருக்கு சேவகம் செய்து, தமது சொந்த நலன்களைப் பேணுவதில் குறியாக இருந்தார்கள். அப்படிப்பட்ட அரசியல்வாதிகள் மீண்டும் உருவாகவேண்டும் என பிரதமர் மஹிந்த தன் ஆசையை வெளியிட்டுள்ளார். அத்தோடு பெரும்பான்மை சமூகத்தை மீறி சலுகைகளைக் கோருவது நச்சுத்தனமான அரசியல் எனக் குறிப்பிடுவதுடன் அடிவருடி அரசியலை மேற்கொண்டவர்களையும் வரவேற்கிறார்.

6 லட்சம் இந்திய வம்சாவழி தமிழ் மக்களை நாடற்றவர்களாக்குவதில் ஐ.தே.கட்சி அரசாங்கத்துக்குத் தோள்கொடுத்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் 1972ஆம் ஆண்டு அரசமைப்பு மூலம் தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கிய உரிமைப் பறிப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்த அல்பிரட் துரையப்பா, தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்குப் பாதகம் செய்த பதியுதீன் மஹ்மூத், தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினராயிருந்தும் அதை விட்டுத் தானும் வெளியேறி முஸ்லிம் மக்களின் ஆதரவையும் பலவீனப்படுத்திய மன்சூர் மௌலானா என காலத்துக்குக் காலம் தமது இனத்துக்கும் தமது மக்களுக்கு துரோகம் செய்து வந்த தலைவர்களின் செயற்பாடுகளையே மஹிந்த எதிர்பார்ப்பதை அவரின் அறிக்கை தெளிவுபடுத்துகிறது. அவர் பெரும்பான்மை சமூகத்தை மீறாத வகையிலேயே தமிழ் மக்கள் சலுகைகளைக் கோர வேண்டுமென எதிர்பார்க்கிறார்.

இவ்வறிக்கை மூலம் தமிழ் மக்கள் கோருவது தமக்கே உரித்தான உரிமைகளே என்ற உண்மையை மறுத்து பெரும்பான்மை இனத்திடமிருந்து சலுகைகளுக்காகக் கையேந்துகிறோம் என்ற கருத்தைப் பலப்படுத்தும் நோக்கம் இழையோடுவதைக் கவனிக்க வேண்டும்.

இப்படியான ஒரு நிலையிலேயே கடந்த மாதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்துப் பேசியமையும் அதன் பின்பு குருநாகல், தங்காலை போன்ற இடங்களில் இடம்பெற்ற மக்கள் சந்திப்புக்களில் ஒன்றுபட்ட நாட்டுக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தயாராயுள்ளதாகவும் தெரிவித்து வந்துள்ளார்.

இப்படி மக்கள் சந்திப்புக்களில் கருத்து வெளியிடும் அவர் தமிழர்கள் தமது இனத்துக்கே துரோகம் செய்த ஜீ.ஜீ.பொன்னம்பலம், அல்பிரட் துரையப்பா போன்று இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பதும் பிரிக்கப்படாத, பிரிக்கப்பட முடியாத நாட்டுக்குள் நியாயமான அதிகாரப் பகிர்வு மூலம் ஒற்றையாட்சி மறுதலிக்கப்படுகிறது எனவும் அறிக்கையில் தெரிவித்திருப்பதும் இனப்பிரச்சினைக்கு அவர் முன்வைக்கப்போகும் தீர்வு எப்படி பெரும் ஏமாற்றமாக அமையும் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

எனினும் ஆட்சியதிகாரத்தில் உள்ளவர்களிடம் பேசியே எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். இன ஒடுக்குமுறையை ஆயுதமாகக் கொண்ட கொடாக்கண்டனாகிய மஹிந்த போன்றவர்களிடம் பேசும்போது நாம் பலமான நிலையில் இருக்க வேண்டும்.

எனவே நாம் ஒன்றிணைந்து ஒரே தலைமையின் கீழ் உறுதியாக அணிதிரளும்போது மட்டுமே எமக்கான உரிமைகளைப் பெறவும் எம்மீதான அநீதிகளைத் தடுத்து நிறுத்தவும் முடியும் என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

# கொரோனாவை ஆயுதமாக பயன்படுத்துகின்றது அரசு!

*சமன் ரத்னப்பிரிய குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூலை 8

**கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஏற்படும் அச்சுறுத்தல் காணப்படும் சூழ்நிலையில், தொற்றாளர்களைக் கண்டறிவதற்கு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லை.**

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பொதுத் தேர்தலை முன்நிறுத்திய தமது பிரசார நடவடிக்கைகளின் போது கொரோனா வைரஸ் பரவல் தடுப்புச்சட்டத்தை அரசாங்கம் கிழித்துப் போட்டிருக்கிறது. அதேவேளை எதிர்த்தரப்பின் பிரசாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் ஆயுதமாகவும் அதனை உபயோகிக்கின்றது உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களை அரசாங்கம் மீண்டும் மீண்டும் விசாரணைக்கு அழைக்கின்றது. அதேபோன்று அத்துரலியே ரத்ன தேரரின் கருத்தையடுத்து இன்னும் சில நாட்களில் மத்ரஸா பாடசாலைகளை மூடுவோம் என்றுகூறி, எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்குகளை வெல்வதே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கிறது என்றே எமக்குத் தோன்றுகிறது. அத்துரலியே ரத்ன தேரர் வேறு கட்சியில் போட்டியிட்டாலும், தேர்தலின் பின்னர் அரசாங்கத்துடன் யாரெல்லாம் கூட்டணி அமைப்பார்கள் என்று தற்போது கூறமுடியாது. எனவே அவர் அரசாங்கத்திற்கு ஆதரவாக இவ்வாறு செய்யும் வாய்ப்பு இருக்கிறது. அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தவர்கள் தான் தற்போது பிரிந்துசென்று வேறொரு தரப்பில் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். இது மிகவும் மோசமான விடயமாகும். எனினும் தேர்தலின் பின்னர் கூட்டணி அமைப்பது தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழுவே தீர்மானம் எடுக்கும்- என்றார். (எ)

# கோத்தாவுக்கு பெரும்பான்மை கோருகின்றார் மைத்திரிபால!

கொழும்பு, ஜூலை 8



நாட்டில் ஜனாதிபதி ஒரு கட்சியிலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பிறிதொரு கட்சியாகவும் காணப்பட்டால் பாரதூரமான முரண்பாடுகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். பொதுத் தேர்தலில் ஜனாதிபதி பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் மக்கள் பலத்தை வழங்க வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பொலன்னறுவையில் பிறந்ததால் என்னையும் வளைத்து விடலாம் என்று ரணில் விக்கிரமசிங்க எண்ணினார். மூன்று வருடங்கள் நிறைவடைய வுள்ளன. மாகாண சபைத் தேர்தல் இன்னும் நடத்தப்படவில்லை. எனது அரசாங்கத்திலிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டு மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்தினார். தொடர்ச்சியாகக் குழுக்களை நியமித்தார். எனினும் அவை செயற்திறனற்ற குழுக்களாகும். புதிய ஜனாதிபதியின் புதிய அரசாங்கத்தின் கீழ் இந்த பிரச்சினைக்குத் தீர்வைக் காணவே நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கோருகின்றோம்.

தற்போது அரசியல்வாதிகளில் அரசியல் கலாசாரம் சீரழிந்துள்ளது. பெரும்பாலான அரசியல்வாதிகள் ஊழல் , மோசடிகளுக்கு உள்ளாகியிருப்பதால் பொது மக்களின் அதிருப்திக்கு ஆளாகியுள்ளனர். இவை அரசியல் நெருக்கடிகளின் ஒரு தொகுதியாகும். அரசியல், பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளை நோக்கும் போது அவற்றைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கத்தை பலப்படுத்த வேண்டும்.

தேர்தலின் பின்னர் நாடாளுமன்ற பலம் எதிர்க்கட்சிக்குச் சென்றால் என்ன ஆகும்? அரசாங்கம் மாத்திரமல்ல முழு நாடும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்- என்றார். (எ)

# விபத்தில் இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 8

டிப்பர் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞன் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை வித்தகபுரத்தைச் சேர்ந்த இராஜரட்ணம் பிரதீபன் (வயது29) என்ற இளைஞரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபையில் பணியாற்றும் இளைஞன் கடந்த 29ஆம் திகதி வேலை முடிந்து வீடு திரும்பியுள்ளார். இணுவில் பகுதியில் முன்னால் சென்ற டிப்பரை முந்திச் செல்ல முயன்றபோது, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடனும், டிப்பருடனும் மோதுண்டுள்ளார். காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.


மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

(ஓ,5,26)

# காங்கேசன் – மகரகம ஊடாக காலிக்கு புதிய பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

மகரகம வைத்தியசாலைக்குச் செல்வோரின் தேவைகருதி, இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலையும், அம்பலாங்கொட சாலையும் இணைந்து காங்கேசன்துறையில் இருந்து மகரகம வைத்தியசாலை ஊடாக காலிக்கு புதிய போக்குவரத்து சேவை ஒன்றை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளன.



குறித்த புதிய பேருந்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 7.15 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியது..இரவு 7.15 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து ஆரம்பமாகும் குறித்த சேவை இரவு 8.05 மணிக்கு யாழ் மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைந்து, பின்னர் 08.15மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா, அனுராதபுரம், கல்கமுவ ஊடாக மகரகம வைத்தியசாலையைச் சென்றடைந்து அதே பாதை ஊடாக காலை 8.40 மணிக்கு காலியைச் சென்றடையும். அவ்வாறே, அதேநாள் பிற்பகல் 4.30 மணிக்கு காலியில் இருந்து புறப்படும் பேருந்து மகரகம ஊடாக யாழ் பேருந்து நிலையத்திற்கு வந்தடைந்து அங்கிருந்து காலை 6.40 மணிக்கு காங்கேசன்துறையைச் சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் வடமாகாண பிரதான பிராந்திய முகாமையாளர் ஏ.ஆ.எவ்.அமீன், வடமாகாண பிராந்திய முகாமையாளர் செயலாற்றல் ஏ.ஜே. லம்பட், வடமாகாண பிராந்திய இலங்கை போக்குவரத்து சபை பாதுகாப்பு முகாமையாளர், பிராந்திய விநியோக முகாமையாளர், பிராந்திய தொழில்நுட்ப முகாமையாளர் மற்றும் கிளிநொச்சி சாலை முகாமையாளர், தொழில் சங்க உறுப்பினர்கள், சாரதிகள் காப்பாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (ரி3)

## போலி முகநூல் கணக்குகளில் அடிவருடிகள் விசமப் பரப்புரை

### லிங்கநாதன் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி தேர்தல் தொகுதி வேட்பாளர்களுக்கு எதிராக தேசியக் கட்சியின் அடிவருடிகள் போலி முகநூல் கணக்குகள் ஊடாக விசமப் பரப்புரை மேற்கொண்டு, மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் தொகுதி நாடாளுமன்ற வேட்பாளர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்திகுறிப்பில், கிராமப்புற தமிழ் வாக்குகளை தேசியக் கட்சிக்காரர்களுக்கும் மாற்று இனத்தவர்களுக்கும் தாரைவார்த்து எங்களுடைய மக்களை குழப்பி வாக்கு வங்கியை உடைப்பதற்காகவே இவ்வாறு பரப்புரை நடத்துகின்றனர். அவர்களால் ஒருபோதும் தமிழ் மக்களின் மனதை மாற்றமுடியாது. விசமப் பரப்புரைகளில் ஈடுபடுகின்றவர்களை மக்கள் இனம்கண்டு செயற்பட வேண்டும்- என்றுள்ளது. (த -110)

## சிறுவர்கள் உயிர்மாய்ப்பு

கொழும்பு, ஜூலை 8

கட்டுகஸ்தொட்ட - பெல்கொல்ல நீர்தேக்கத்தில் குதித்து தற்கொலை செய்த இருவரின் சடலங்கள் மீனவர்களின் உதவியுடன் கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டி, நவயாலதென்ன பகுதியை சேர்ந்த 17 வயதுடைய சிறுவனும் ஒருவனும் 16 வயதுடைய சிறுமி ஒருவரும் இன்று காலை 5. 40 மணியளவில் நவயாலதென்ன ரயில் பாலத்தில் இருந்து மகாவலி ஆற்றில் குதித்து தற்கொலை செய்துள்ளனர். குறித்த இருவரும் 10 மற்றும் 11ஆம் வகுப்புக்களில் கல்வி கற்று வருவதுடன் காதல் விவகாரம் தொடர்பாக இந்த தற்கொலை இடம்பெற்றிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் இருவரையும் நேற்றில் இருந்து காணவில்லை என அவர்களுடைய பெற்றோர் இன்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ரி3)



## உளவுத் தகவல்களுக்கு அமைய பொது இடங்களுக்குப் பாதுகாப்பு

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜூலை 8

உளவுத்துறையின் ஆலோசனைக்கு அமைய கதிர்காமம், கண்டி மற்றும் பிற வழிபாட்டு தலங்கள் உட்பட தேவாலயங்கள் மற்றும் பொதுஇடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடக பேச்சாளர் ஜாலிய சேனரத்ன கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தகவல் தெரி வித்தபோதே இதனைக் குறிப்பிட்டார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடு முழுவதும் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும் சிறப்பு புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏதேனும் தேவாலயம் அல்லது பிற வழிபாட்டுத் தலங்கள் கூடுதல் பாதுகாப்புக் கோரினால், பாதுகாப்பு வழங்கப்படும். கடந்த இரண்டு வாரங்களில், ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகமான சட்ட நடைமுறையாக்கல் பணியாளர்கள் தேவாலயங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றனமை யைக் காண முடிந்தது.

இந்த பாதுகாப்புக்காக சில தேவாலயங்களும் கோரிக்கை விடுத்திருந்தன.

இது ஒரு சிறப்பு நடவடிக்கை அல்ல, ஆனால் உளவுத்துறை வழங்கிய எச்ச ரிக்கையின் ஒரு பகுதியாகும்.

தேவாலயங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்று புலனாய்வுத் துறையால் எச்சரிக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து பொலிஸ் நிலையங்களும் சிறப்பு புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள எச்சரிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக கண்டி பெர ஹேரா மற்றும் கதிர்காமம் உள்ளிட்ட மக்கள் கூடும் இடங்களில், நாங்கள் தொடர்ந்து விழிப்புடன் இருப்போம் - என்றார். (ரி2)





நெளுக்குளம் இளைஞர்களின் முயற்சியால்

## அரசியல் கைதியின் தாய்க்கு நேற்று புதிய வீடு கையளிப்பு

வவுனியா, ஜூலை 7

வவுனியா சிறைச்சாலை யில் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்ட அரசியல் கைதி நிமலரூபனின் தாயாருக்கு நெளுக்குளம் இளைஞர்களின் முயற்சியால் 5 லட்சம் ரூபாய் செலவில் அவரின் நினைவுநாளை முன்னிட்டு நேற்று வீடு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த தாயார் தனது அரை நிரந்தர வீட்டில் வசித்து வந்த நிலையில், 8 வருடங்களின் பின்னர் இந்த வீடு பூர்த்திசெய்யப்பட்டு அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் நிமலரூபனின் நெளுக்குளம் நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வவுனியா சிறைச்சாலையிலிருந்து மகர சிறைக்கு மாற் றப்பட்ட நிலையில் சிறையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் சிறை காவலர்களின் தாக்குதலுக்குள்ளாகி கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் திகதி நிமலரூபன் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி3-18)

## திருகோணமலையில் நெல் அறுவடை ஆரம்பிப்பு

திருகோணமலை ஜூலை 8

திருகோணமலை மாவட்ட கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிரான், குரங்குபாஞ்சான் விவசாய பகுதிகளில் தற்போது நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஓரிரு நாள்களுக்கு முன்பு இந்த நெல் அறுவடை இடம்பெற்று வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 500 க்கும் மேற்பட்ட ஏக்கர்களிலுள்ள விவசாய நிலங்களில் செய்கை பண்ணப்பட்டு அறுவடை நடந்து வருகின்றது. விவசாயிகள் அறுவடையை இயந்திரம் மூலமாகவே மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)

# போராளிகளைச் சிறையில் வைத்தவர் இன்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார்

## விக்கியை சாடுகிறார் சரவணபவன்



யாழ்ப்பாணம், ஜூலை 8

**கடந்த காலத்தில் நீதியரசராக இருந்து பல போராளிகளைப் பயங்கரவாதிகள் எனக்கூறி சிறைக்கு அனுப்பியவரே முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன். ஆனால் இன்று அவர்களை விடுவிக்கவேண்டும் என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறார். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குற்றஞ்சாட்டினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் யாராலும் வெற்றிகொள்ள முடியாது எனக் கணிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்சவை வீட்டுக்கு அனுப்பியவர்கள் நாங்கள். எனவே எம்மால் முடியாதது என்று எதுவும் இல்லை. இந்தத் தேர்தல் எமது இனத்தின் இருப்புக்கான தேர்தல். 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழர், முஸ்லிம்கள் சிங்கள முற்போக்குவாதிகள் என அனைவரும் இணைந்து கோத்தாபயவுக்கு எதிராக வாக்களித்தோம். எதிர்பார்ப்புக்கு எதிராகவே முடிவுகள் அமைந்தன. நாம் விரும்பாத ஒருவரே ஆட்சிப்பீடம் ஏறியுள்ளார். இதன் விளைவுகளை நாம் கடந்த சில நாள்களிலேயே கண்டுள்ளோம். இத்தகைய சூழலில் எமது மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. போராட்ட வழியில் நின்று உருவாக்கப்பட்ட அமைப்பு இது. இதன் வெற்றி உங்கள் கையில் அமைந்துள்ளது. எமது இனத்தின் அடையாளம் வீடு. உங்கள் அபிமான சின்னமான வீட்டுக்கு புள்ளடியிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமோக வெற்றி பெறச் செய்யுங்கள்- என்றார். (ஒ.ப,ந)

கூட்டமைப்புக்குரிய

# தேசியப் பட்டியல் ஆசனம் சிங்களவருக்கு கைமாறும்

யாழ்ப்பாணம், ஜூலை 8


பிரிந்து நின்று உதிரிகளாக தேர்தலில் போட்டியிடுவதால் எமது பிரதிநிதித்துவ பலம் சிதைவடையவே செய்யும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைக்கக் கூடிய தேசியப்பட்டியல் ஆசனம் தென்பகுதிக்குச் செல்லக் கூடிய அபாயம் காணப் படுகின்றது. மேலும் வடக்கு -கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் கிடைக்க வேண்டிய நிதி ஒதுக்கீடு களும் பறிபோகும். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும், வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலையே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நான்கு கட்சிகளின் கூட்டாக பெரும் வெற்றி கண்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. மாகாண சபையின் ஆட்சிக் காலம் முடியும்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி முழுமையாக கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. நீதியரசர் விக்னேஸ்வரன், திருமதி அனந்தி சசிதரன், பொ.ஐங்கரநேசன் போன்றோர் தனிக்கட்சி ஆரம்பித்து கூட்டமைப்புக்கு எதிரான நிலையில் உள்ளனர். ரெலோ அமைப்பும் இரண்டாக பிரிந்து ஒரு பிரிவினர் விக்னேஸ்வரன் தலைமையிலானதமிழ்மக்கள் கூட்டமைப்புடன் இணைந்து கொள்ள ரெலோ தலைமையினர் கூட்டமைப்பு டன் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறு பிரிந்து நின்று உதிரிகளாக தேர்தலில் போட்டியிடுவதால் எமது பிரதிநிதித்துவ பலம் சிதைவடையவே செய்யும். எமது மக்கள் சிரமம் பாராது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழுமையாக வாக்களிப்பதன் மூலம் அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்களை நேரடி யாகத் தெரிவுசெய்யப்படுவது மட்டுமன்றி தேசியப் பட்டியலில் இரண்டு பேருக்கு கூடிய உறுப் பினர்களைத் தெரிவு செய்யக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்-என்றார். (ஒ.5)

# வட, கிழக்குத் தமிழர்களுக்கு நாட்டில் சிறப்புரிமை கிடையாது

## அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 8

இந்த நாட்டில் வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு சிறப்பு உரிமைகள் எதுவும் கிடையாது. இலங்கையானது பிளவுபடாத பிரிக்கமுடியா நாடு என்ற கருத்தாடலையும் அவர்கள் மத்தியில் உருவாக்கவேண்டும் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்களின் ஆதரவை ராஜபக்ச அரசால் ஏன் இன்னும் வெல்லமுடியாதுள்ளது என்று எழுப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு, கிழக்கில் தமக்கு சுயநிர்ணய உரிமை இருப்பதாக தமிழ் மக்கள் நம்புகின்றனர். இதனை அடிப்படையாகக்கொண்டு போராட்டம் இடம்பெற்றது. இதன்போது பிரதான கட்சிகள் மக்களை ஏமாற்றினவே தவிர, நேரடி பதில்கள் எதனையும் வழங்கவில்லை. சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இந்நாட்டில் சம உரிமைகள் இருக்கின்றன என்பதை நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். வடக்கு, கிழக்கு மக்களுக்கு அப்பகுதியில் விசேட உரிமையுள்ளது என்ற காரணியை ஏற்கமுடியாது. இதனை சுட்டிக்காட்டுவதால் எமது கட்சி மீது மக்கள் அதிருப்தி அடைகின்றனர். இருப்பதை நாம் தடுப்பதுபோல் உணர்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு பிரபாகரன் கொடுமைகளை இழைத்திருந்தாலும் சிலர் மத்தியில் அவருக்கு ஆதரவு இருக்கின்றது என்பதையும் நாம் ஏற்கவேண்டும். போர் முடிவடைந்த பின்னர் அது இல்லாமல் போய்விட்டது. இதனால் கவலையில் இருக்கும் சிலரும் இருக்கவே செய்கின்றனர்.

சிங்களம், தமிழ், முஸ்லிம் என அனைத்து மக்க ளையும் சமமாக வழிநடத்தும் தலைவரே ஜனா திபதி கோத்தாபய ராஜபக்ச என்பதை வடக்கு, கிழக்கு மக்கள் புரிந்து கொள்வதற்கு இன்னும் சில காலம் எடுக்கும். அதற்கான அவகாசத்தை நாம் வழங்கவேண்டும். அதேபோல் இலங்கையானது பிளவுபடாத பிரிக்கமுடியாத நாடு என்பதையும் சுட்டிக்காட்டவேண்டும் -என்றார். (ஒ,5,44)

# கிராஞ்சியில் 15 பக்கெற் சி4 வெடி மருந்து மீட்பு



கிளிநொச்சி, ஜூலை 8

குண்டு தயாரிக்கப் பயன் படுத்தப் படும் சி 4 வெடிமருந்துகள் கிளிநொச்சி யில் நேற்று மீட்கப்பட்டுள்ளன. 15 பக்கற்றுக்களில் பொதிசெய்யப்பட்ட நிலையில் அவை மீட்கப்பட்டன என்று ஜெயபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, கிராஞ்சி கடற்கரையை அண்டிய பகுதியில் உள்ள தனியாருடைய வெற்றுக் காணி ஒன்றில் இருந்து அந்த மருந்து மீட்கப்பட்டது. பொது மக்கள் வழங்கிய தகவலை அடுத்து சம்ப இடத்துக்கு வந்த ஜெயபுரம் பொலிஸார் குறித்த வெடி மருந்துகளை மீட்டனர்.

அது தொடர்பில் விசேட அதிரடிப் படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த அதிரடிப் படையினர் அந்த மருந்துகளை அழித்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-6)

# யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு வரைபட்டிகைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 8


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்க ளுக்கு வரைபட்டிகைகள் (Tablets) இரவல் முறையில் வழங்கும் நிகழ்வு கடந்த 03ஆம் திகதி கல்லூரியில் நடைபெற்றது. ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தினால் முதல் தொகுதியாக பாடசாலைக்கு கைய ளிக்கப்பட்ட 49 வரைபட்டிகைகள் மாணவர்களுக்கு இரவல் அடிப்படையில் வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவை மாணவர்கள்.கற்றல் செயற்பாட்டுக்கு மட்டும் பயன்படக்கூடிய வகையிலான பாதுகாப்பு அம்சங்களுடன் வழங்கப்படுகின்றன எனவும், இவ் வரைபட்டிகைகளில் ஆசிரியர்களின் கற்பித்தல் காணொலிகள் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)



# விலங்கின நோய்கள் மனிதரிடையே அதிகரிப்பு!

**கொழும்பு, ஜூலை 8**
**விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்கள் அதிகரித்து வருகின்றன என்று ஐக்கிய நாடுகளின் நிபுணர்களால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்கும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கை இல்லாமையே இதற்கான காரணம் என்றும் ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

விலங்கின நோய்கள் காரணமாக வருடாந்தம் இரண்டு மில்லியன் மக்கள் காவுகொள்ளப்படுகின்றனர். எபோலா, வெஸ்ட் நைல் வைரஸ் மற்றும் சார்ஸ் போன்ற நோய்கள் விலங்குகளுக்குத் தோன்றியே பின்னர் மனிதர்களுக்குத் தாவின.

ஐக்கிய நாடுகளின் சுற்றுச் சூழல் திட்டம் மற்றும் சர்வதேச கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் அறிக்கையின்படி, இயற்கை சூழலின் சீரழிவால் இந்த நோய்த் தாவல் இடம்பெறுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக நிலச்சீரழிவு, வனவிலங்கு சுரண்டல், வளப் பிரித்தெடுத்தல் மற்றும் காலநிலை மாற்றம் என்பவை விலங்குகளும் மனிதர்களும் தொடர்பு கொள்ளும் விதத்தை மாற்றுகின்றன. உதாரணமாக, கடந்த 50 ஆண்டுகளில் இறைச்சி உற்பத்தி 260 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று ஐக்கிய நாடுகளின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. (ரி2)

## பரீட்சை திகதி இறுதி முடிவு எதிர்வரும் 10ஆம் திகதி

G.C.E (A/L)

கொழும்பு, ஜூலை 8
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை பிற்போடுவதா இல்லையா என்ற தீர்மானம் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையை செப்ரெம்பர் 7ஆம் திகதி நடக்கும் என அறிவித்துள்ள நிலையில் அதனை மேலும் பிற்போடுவதாகத் தெரிவிக்கப்படும் செய்தி தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ரி1)

## அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை

### எச்சரிக்கின்றார் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 8
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் வழங்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தை உதாசீனம்செய்யும் பாடசாலை அதிபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.உதய குமார் தெரிவித்துள்ளார்.

இந்தச் சுற்றுநிருபத்தை கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நடைமுறைப்படுத்தி வருகிறார் எனவும், வடக்கு மாகாணத்திலும் இச் செயன்முறை முறையாகப் பின்பற்றப்படவேண்டும் எனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் எடுத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆசிரியர்கள் வழமையான கைவிரல் அடையாளமிடுதல், 7.30இல் இருந்து 3.30 வரை பாடசாலையில் இருத்தல் என்பன கல்வி அமைச்சினால் கட்டாயமாக்கப்படவில்லை எனவும், எனினும் இதனை அனைத்துப் பாடசாலைகளும் முறையாகப் பின்பற்றவேண்டும் என்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளதுடன், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் பாடசாலைகள் முகாமைசெய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ரி3)

## கதிர்காம உற்சவத்துக்கு பக்தர்கள் செல்லத் தடை!

கதிர்காமம், ஜூலை 8
கதிர்காமக் கந்தனின் வருடாந்த உற்சவத்துக்கு பக்தர்கள் பங்கேற்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொவிட் - 19 பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமக் கந்தனின் வருடாந்த உற்சவமானது இம்மாதம் 21 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 04 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)



## கொவிட் நிதியத்துக்கு 2 லட்சம் ரூபா வழங்கிய 84 வயது ஆசிரியை!

புத்தளம், ஜூலை 8
புத்தளம், மனங்குளத்தில் வசிக்கும் ஓய்வுபெற்ற ஆசிரியையான 84 வயதான திருமதி எம்.ஏ.எச்.பி.மாரசிங்க இரண்டு லட்சம் ரூபாவை கொவிட் நிதியத்துக்கு வழங்கியுள்ளார்.

பொதுஜன முன்னணியின் மக்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை புத்தளத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட ஜனாதிபதி கோத்தாபயவிடம் குறித்த தொகை நிதி நேரடியாகக் கையளிக்கப்பட்டது. (ரி1)



## திருமண மண்டபங்களில் 300 பேர் வரையில் கலந்துகொள்ள அனுமதி

கொழும்பு, ஜூலை 8
திருமண மண்டபங்களிலுள்ள மொத்த ஆசன எண்ணிக்கையில் 50 சதவீதமானோர் அல்லது 300க்கும் மேற்படாத எண்ணிக்கையானோர் திருமண நிகழ்வில் கலந்துகொள்வதற்கு நேற்றுமுன்தினம் தொடக்கம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதில் துணை மணமக்கள், திருமண நிகழ்வில் கலந்துகொள்ளும் இசைக்குழுவினர் மற்றும் ஏனைய கலைஞர்களும் உள்ளடக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமண நிகழ்வில் கலந்துகொள்பவர்கள் சமூக இடைவெளியைப் பேண வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

மேலும், திருமண மண்டபங்கள் தொடர்பில் ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களும் பின்பற்றப்படவேண்டும் என்றும் விசேட வைத்தி யர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். (ரி1)

## ஒற்றையாட்சியை ஏற்ற தமிழ் தலைமைகளாலேயே தீர்வில்லை

### கூறுகிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
13ஆவது திருத்தச் சட்டத்தையும் ஒற்றையாட்சி முறைமையையும் தமிழ் தலைமைகள் ஏற்றுக்கொண்ட காரணத்தாலே இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுத் திட்டத்தை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர தமிழ்த் தரப்புக்கள் என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏனைய அனைத்து தரப்புக்களும் ஒற்றையாட்சி இடைக்கால அறிக்கையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

சரித்திரத்தில் முதல் தடவையாக நான்காவது அரசமைப்பு இலங்கையில் கொண்டு வரப்படவுள்ள நிலையில் அந்த நான்காவது அரசமைப்பு ஓர் ஒற்றையாட்சியாக இருக்கின்ற நிலையில் தமிழ் மக்கள் அதனை ஆதரிக்கும் நிலைமை உருவாகப் போகிறது.

சர்வதேசம் இன்றைக்கும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றது. தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் அரசமைப்பு உருவாக்கப்பட்டால்தான் இந்தத் தீவில் இனப் பிரச்சினை இல்லை எனவும் நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்தையும் அபிவிருத்தியையும் அடைய முடியும் என்பதையும் வலியுறுத்துகின்றார்கள். ஆனால், அந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற விடயத்திலே, போருக்குப் பிற்பாடு இதுவரைக்கும் எமது தலைவர்களாக இருந்தவர்கள் 13ஆவது திருத்தத்தையும் ஒற்றையாட்சியையும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருந்தபடியால்தான் இன்று ஆபத்து உருவாகியிருக்கிறது- என்றார். (ஒ.5,20)

# பஸ் பயணங்களை இலகுபடுத்த புதிய செயலி அறிமுகம்

கொழும்பு, ஜூலை 8

இ.போ.ச மற்றும் தனியார் பஸ்களில் பயணிக்கும் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் நோக்கில் MyBus-lk என்ற கைத்தொலைபேசி செயலி (app) நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீரவின் அறிவுறுத்தலுக்கமைய, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இந்த கைத்தொலைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கைத்தொலைபேசி செயலி ஊடாக, பஸ் ஒன்றின் பயணம் ஆரம்பிக்கும் இடம், பயணம் முடிவடையும் இடம், பயணம் ஆரம்பிக்கும் நேரம், பயணம் முடிவடையும் நேரம், பஸ் தரிப்பிடங்கள், பயணக் கட்டணங்கள், தான் பயணிக்கும் பஸ் தற்போது உள்ள இடம் என்பவற்றை இலகு வில் அறிந்துகொள்வதுடன், போக்குவரத்தின்போது தாம் முகங்கொடுக்கும் இன்னல்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொள்ளவும், அட்டைகளின் மூலம் கட்டணத்தைச் செலுத்தவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்தச் செயலியை அறிமுகப்படுத்தும் தினத்தில், அதனை உருவாக்கிய தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் இளம் பட்டதாரியான நுவன் செனவிரத்னவை கௌரவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (ரி3)



## மேல் மாகாணத்தில் விசேட சோதனை:

# 388 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 8

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போது 388 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 6 மணி முதல் நேற்று காலை 5 மணி வரையான 24 மணிநேர காலப்பகுதியில் மேற் கொள்ளப்பட்ட சோதனையின் போதே குறித்த கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களில், ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் 145 பேரும், சட்டவிரோத மது பானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 113 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 92 பேரும், ஏனைய போதைப் பொருள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 38 பேரும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# பெயுன் கைது!

கொழும்பு, ஜூலை 8

ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற வியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த குழு உறுப்பினர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

'பெயுன்'என அழைக்கப்படும் கிரிஷான் நிலங்க தபரே என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

அத்துருகிரிய பகுதியில் வைத்து அவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்துள்ளனர். இந்த கைது நடவடிக்கையின்போது அவரிடமிருந்து ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. (ரி1)

# கோள் மண்டலம் மீண்டும் திறப்பு!

கொழும்பு, ஜூலை 8



கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் காரணமாக கடந்த மார்ச் 17 ஆம் திகதி மூடப்பட்டிருந்த இலங்கைக் கோள் மண்டலம் பொதுமக்களின் பார்வைக்காக நேற்று மீண்டும் திறக்கப்பட்டது.

இது தொடர்பில் இலங்கை கோள் மண்டல பணிப்பாளர் கே.அருணு பிரபா பெரேரா தெரிவித்துள்ளதாவது;

கோள் மண்டல வளாகத்தில் சமூக தொலைவு பராமரிக்கப்படும் அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் - என்றார். (ரி2)


# 321 இலங்கையர் தாயகம் திரும்பினர்

கொழும்பு, ஜூலை 8

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இலங்கைக்கு வர முடியாமல் சவூதி அரேபியா, கட்டார், பிலிப்பைன்ஸ் நாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 321 பேர் நாட்டை வந்தடைந்துள்ளனர். சவூதி அரேபியாவில் வேலைவாய்ப்புக் கருதி புறப்பட்டுச் சென்றிருந்த 275 பேர் சவூதி அரேபியாவின் ரியாத் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் விசேட விமானம் மூலம் நேற்று காலை சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். இலங்கையைச் சேர்ந்த கப்பல் பணியாளர்கள் 05 பேர் கட்டாரின் டோஹா நகரிலிருந்து நேற்று அதிகாலை 1.45 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்கள் அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ரி1)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப் பட்டது. இதன்படி நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.மாவட்டத்தில்** மந்திகை உபயகதிர்காமம், வல்லிபுரம், வல்லிபுரம் தேசிய நீர்ப்பாசன சபை, ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** சமனன்குளம் பிரதேசத்திலும் மேலும் **மன்னாரில்** காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கொக்குபடையான், கொண்டாச்சி கிராமம், மறிச்சுக் கட்டி, முள்ளிக்குளம், கரடிக்குழி, பாலக்குழி, முள்ளிக்குளம் கடற்படைமுகாம், சிறுநாவற் குளத்திலிருந்து தலைமன்னார் வரையும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.



# இன்றைய நாள்

**மேடம்:** கலை உணர்வுடன் நண்பரிடம் பேசி மகிழ்வீர்கள். மனதில் சிரமங்களை பற்றிய சிந்தனை குறையும். உபரி வருமானத்தில் குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். தியான வழிபாடு மன அமைதி தரும்.

**இடபம்:** சிலர் கூறும் தவறான ஆலோசனைகளை பின்பற்றாமல் இருப்பது நல்லது. அவப்பெயர் வராத வகையில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்.

**மிதுனம்:** பேச்சில் சாந்தகுணம் வெளிப்படும். செயல்களில் வெற்றி பெற தேவையான அனுகூலம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும்.

**கடகம்:** சிலரது பேச்சு மனதிற்கு சங்கடத்தை ஏற்படுத்தும். பொது இடங்களில் அதிகம் பேசுவதை தவிர்ப்பீர். தொழில், வியாபார நடைமுறை சீராக இருக்கும். பணவரவு சராசரி அளவில் கிடைக்கும்.

**சிம்மம்:** வாழ்வில் இருந்த குறுக்கீடு விலகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் பணி புரிவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**கன்னி:** பேச்சில் மங்கலம் நிறைந்திருக்கும். எதிரிகளின் தொல்லை மறையும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். அதிக பணவரவில் சேமிப்பு கூடும்.

**துலாம்:** குடும்பத் தேவை அதிகரிக்கும். எவரையும் நம்பி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேற்றுவது நல்லது.

**விருச்சிகம்:** எதிர்வரும் சிரமங்களை தாமதமின்றி சரி செய்வீர்கள். நல்லவர்களின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் நன்மை தரும்.

**தனுசு:** செயல்கள் வெற்றி பெற எளிதான வழி பிறக்கும். நண்பர் தேவையான உதவியை செய்வர். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** பணியில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். உபரி வருமானம் கிடைக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** கேலி பேசுபவரிடம் விலகி சுய கௌரவத்தை பாதுகாப்பீர்கள். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கூடுதல் கால அவகாசம் தேவைப்படும்.

**மீனம்:** முக்கிய பணி நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபார நடைமுறை சீரான அளவில் இருக்கும். சிக்கனத்தை பின்பற்றுவது நன்மை தரும்.

# பல்கலைகளை ஆரம்பிப்பதில் இலங்கை துரிதம்!



பந்துல பெருமிதம்

கொழும்பு, ஜூலை 8

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிப்பதில் இலங்கை துரிதமாக செயற்பட்டுள்ளது என்று உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இணையத்தளத்தினூடாக விரிவுரைகளை முன்னெடுத்து இறுதியாண்டு மாணவர்களுக்குப் பரீட்சைகளை நடத்த முடிந்துள்ளமை பெரும் வெற்றியாகும்.

பல்கலைக்கழக சமூகத்தினர் அர சாங்கத்துக்கு இருவேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கினர். பல்கலைக்கழகங்களில் முழுநேர பி.சி. ஆர். பரிசோதனை இயந்திரங்களை வழங்கி பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. பல்கலைக்கழக விடுதிகள் தனிமைப்படுத்தலுக்காக வழங்கப்பட்டன.

கொரோனா அச்சுறுத்தலிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்கு உயர்கல்வி அமைச்சர் ரீதியில் பல்கலைக்கழகங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்" எனத் தெரிவித்துள்ளார். (ரி1)

## கொள்ளையர்கள் கைது!

கண்டி, ஜூலை 8

கண்டி ஹசலக பொலிஸ் பிரிவின் ஹின்கங்க பகுதியில் ஏ-26 வீதியில் பயணித்த தனியார் பேருந்தை வழி மறித்து வாயு துப்பாக்கியைக் காட்டி கொள்ளையிட முயற்சித்த பிரதேச சபை உறுப்பினர் உட்பட சிலர் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மினிபே பிரதேச சபை உறுப்பினர் உட்பட சில சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் .

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந்தப் பேருந்தில் 15 பயணிகள் இருந்துள்ளனர் பயணிகள் இரண்டு சந்தேகநபர்களை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். ஏனைய சிலர் தப்பிச் சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மஹியங்கனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)



## சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்

கரணவாய் ஜூலை 8

இமையாணன் உடுப்பிட்டியைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் ருசியந்தன் நேற்று வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் இவர், இமையாணன் கிராம அபிவிருத்திக் குழுவின் பொருளாளராகவும் இமை யாணன் ஸ்ரீமுருகன் ஆலயப் பரிபாலனசபையின் செயலாளருமாக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி3 ,108)

## உந்துருளிகளுக்கு தீ வைப்பு

ஹொரவபொத்தான, ஜூலை 8

கங்கைக்கு மீன்பிடிக்கச் சென்ற மூவரின் உந்துருளிகள் அடையாளம் தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு ஹொரோவபத்தான நகரில் இடம்பெற்றுள்ளது.

அந்த உந்துருளிகளை ஓர் இடத்துக்கு கொண்டு சென்று தீ வைத்துள்ளனர் என்றும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

## அரச வாகனங்களை பறிமுதல் செய்ய விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 8

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் பயன்படுத்தப்பட்டு, இதுவரை ஒப்படைக்கப்படாத அரச வாகனங்களைப் பறிமுதல் செய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதன்படி 11 அரச வாகனங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், அவற்றில் இரண்டு வாகனங்கள் மாத்திரம் இதுவரை ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த மார்ச் 2 ஆம் திகதிக்குள் அரச வாகனங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும், ஆனால் சில அமைச்சர்கள் அந்த வாகனங்களை ஒப்படைக்கத் தவறியுள்ளனர் எனவும் தேர்தல் ஆணையகத்தின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார். . (ரி3)

## பொலிஸாரால் தேர்தல் சுவரொட்டிகள் அகற்றல்

மட்டக்களப்பு, ஜூலை 8

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் பொருட்டு ஒட் டப்பட்ட சுவரொட்டிகள், பதாகைகள் என்பன பொலிஸாரால் அகற்றப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை பொலிஸார் அகற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

## ஜேர்மனிக்கான இலங்கையின் புதிய தூதுவர் நியமனம்



கொழும்பு, ஜூலை 8

ஜேர்மனிக்கான இலங்கையின் புதிய தூதுவராக கூட்டுறவு தொழில் வல்லுநர் மனோரி உனம்புவா நியமிக்கப்பட்டுள்ளார். ஜேர்மனியின் முன்னாள் தூதுவர் கருணாசேன ஹெட்டியாராச்சிக்கு பதிலாகவே மனோரி உனம்புவா அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை அவர் சுவிற்சர்லாந்துக்கான இலங்கையின் தூதுவராகவும் கடமையாற்றுவார். ஆஸ்திரேலிய வணிக நிறுவனத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமாணி பட்டம் பெற்றவர் இவர், இலங்கைக்கான தெற்காசிய பசுபிக் நாட்டின் விற்பனை மேலாளராக பணியாற்றியுள்ளமையுடன், தற்போது இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் குழு உறுப்பினராகவும் உள்ளார். (ரி3)

## கஞ்சா விற்பனை; மூதாட்டி கைது

திருகோணமலை, ஜூலை 8

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த மூதாட்டி ஒருவர் (வயது 65) நேற்று முன்தினம் கந்தளாய் போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோவில் கிராமம், கந்தளாய் பகுதியைச் சேர்ந்த அவரிடமிருந்து 200 கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இவர் சிறைச்சாலையில் எட்டு மாதம் சிறைவாசம் அனுபவித்துவிட்டு வெளியில் வந்த் நிலையில் மீண்டும் கஞ்சா போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்தார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும், சந்தேகநபரை தடுத்து வைத்துள்ளதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்ப டுத்தவுள்ளோம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)


## கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 8

முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களனிநதி மாவத்தையில், கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 56.46 கிலோ கிராம் கஞ்சா மற்றும், ஒரு தொகைப் பணம், நிறுத்தல் கருவி, கையடக்கத் தொலைபேசி ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, நேற்றுமுன்தினம் பிற்பகல் 12.50 மணியளவில், மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அதே பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் (வயது 39) கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (ரி3)



# கூட்டமைப்புக்கு வாக்கிடல் காலத்தின் கட்டாய தேவை

## வேட்பாளர் உதயகுமார் மட்டக்களப்பில் பேச்சு

மட்டக்களப்பு, ஜூலை 8

தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பது காலத்தின் தேவையாகும் என்று தெரிவித்தார் மட்டக்களப்பு மாவட்டத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மா.உதயகுமார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 கட்சிகளும் 22 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. 5 உறுப்பினர்களுக்காக 304 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இவர்களில் சில கட்சிகளினூடாக தமிழர்கள் பலர் போட்டியிடுகின்றனர். அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் பலர் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வசிக்கலாம். ஆனால் உறவுகளுக்காகவோ அல்லது நட்புக்காகவோ அல்லது ஊரான் என்பதற்காகவோ தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களைத் தவிர்ந்த ஏனைய வேட்பாளர்களுக்கு எந்தவொரு தமிழ் வாக்காளரும் வாக்களிக்கக்கூடாது. அவ்வாறு யாராவது வாக்களித்தால் அது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகத்தான் கருதப்படும்.

தற்போதைய அரசியல் கள நிலைவரங்களையும் தமிழர்சார் அரசின் கொள்கைகளையும் ஒவ்வொரு தமிழரும் புரிந்துகொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த கட்சிகள் சில பல மாயையான தோற்றப்பாடுகளை நம் இளைஞர்கள் மத்தியில் தோற்றுவித்து அவர்களை ஏமாற்றப் பார்க்கின்றன. இந்தஏமாற்று வித்தைகளை இளைஞர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த உதிரிக் கட்சிகளுக்கு தமிழ் மக்கள் அளிக்கின்ற வாக்குகள் ஒவ்வொன்றும் பல கட்சிகளுக்குப் பிரிவதனால் இந்தச் செயற்பாடானது மாற்று இனத்தவருக்கு எமது பிரதிநிதித்துவத்தினை தாரை வார்ப்பதற்கான நடவடிக்கையாகவே அமையும். (ம)

## மட்டு.மாவட்டத்தில் டெங்கு அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குத் தொற்று அதிகரித்து வருகின்றது. அந்த வகையில், கடந்த ஜூன் 19ஆம் திகதி தொடக்கம் ஜூன் 26ஆம் திகதி வரையிலான ஒரு வாரத்துக்குள் சுமார் 16 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேரும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேரும், மத்தி வாழைச்சேனைப் பிரிவில் 2 பேரும், வாழைச்சேனைப் பிரிவில் ஒருவருமாக மொத்தம் 16 பேர் மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். (ம)

## போலியான கிரிக்கெட் லீக்: ஒருவர் இந்தியாவில் கைது

கொழும்பு, ஜூலை 8

இந்தியாவின் மொஹாலியில் வைத்து இலங்கையின் ஊவா லீக் எனக் கூறி கிரிக்கெட் போட்டிகளை நடத்தினார் எனக் கூறப்படும் நபரொருவர் அங்கு கைது செய்யப்பட்டார். ரவீந்தர் டண்டிவால் என்பவரே கைது செய்யப்பட்டவராவார். இவர் ஏற்கனவே சர்வதேச டென்னிஸ் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டவர் ஆவார்.

இந்தப் போலி கிரிக்கெட் லீக் சண்டிகாருக்கு அருகில் ஜூன் இறுதி நாட்களில் நடத்தப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் குழுவொன்றும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ம)

## பல்கலை விரிவுரையாளர்களுக்கு மாடி வீடுகள் வழங்குகிறது அரசு

கொழும்பு, ஜூலை 8

இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு காணி உறுதிப்பத்திரத்துடன் கூடியதாக மாடி வீட்டுத் திட்டமொன்றை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

களனி, கொழும்பு, ஜயவர்தனபுர, மொரட்டுவ மற்றும் அழகியற்கலை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வீடுகளின்றி பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளனர். இது தொடர்பாக அமைச்சின் செயலாளர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபை செயலர் அடங்கிய குழு ஆராய்ந்து மேற்படி முடிவு எட்டப்பட்டது என்று உயர்கல்வி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)



## சிறுவர் பூங்காவில் தொற்றுநீக்கல்

வவுனியா, ஜூலை 8

வவுனியா குடியிருப்பு சிறுவர் பூங்காவில் தொற்றுநீக்கும் செயற்பாடுநேற்றுமுன்னெடுக்கப்பட்டது. கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக நாட்டில் உள்ள சிறுவர் பூங்காக்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. கொரோனாவின் தாக்கம் குறைவடைந்து நாடு தற்போது படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது. இதையடுத்தே வவுனியா குடியிருப்பு பூங்காவில் தொற்று நீக்கும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ம -110)

## தமிழர்களின் இருப்பை பாதுகாப்பாராம் கருணா

கொழும்பு, ஜூலை 8

தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாத்து பொருளாதாரத்தை வளமாக்குவதே எனது இலக்கு என ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

அம்பாறை, கல்முனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அடுத்த 15 ஆண்டுகளுக்கு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசே தொடரும். அந்த ஆட்சியில் பங்காளிக் கட்சியாக இருந்து மக்களுக்கான சேவைகளை நாம் முன்னெடுப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியது நானே. ஆனால் சம்பந்தர் ஐயா 'அப்படியில்லை புலிகளால் உருவாக்கப்படவில்லை' என்று கூறுகிறார். உண்மையில் அக்கட்சி உருவாக்கத்தின்போது அருகில் நானிருந்தேன். இன்றும் உயிருடன் இருக்கிறேன். இதனை எப்படி மறைப்பது?

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் இருப்பை பாதுகாத்து பொருளாதாரத்தை வளமாக்குவதே எனது இலட்சியம். ஆனால், எனது வருகையை அடுத்து இங்கு முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் பயம் வந்துவிட்டது.

கடந்த நான்கரை ஆண்டுகளில் எமது மக்களை சீரழித்துவிட்டார்கள். வாக்களித்த மக்களை நடுத்தெருவில் விட்டுவிட்டு இன்று மீண்டும் வாக்குக் கேட்டு வருகிறார்கள். எனவே, எமது சின்னம் வெறும் கப்பல் அல்ல. தத்தளிக்கும் மக்களை காப்பாற்றி கரைசேர்க்கும் கப்பல். எனவே தத்தளிக்கின்ற அம்பாறை தமிழ் மக்களைக் காப்பாற்றி கரைசேர்க்கின்ற இந்த கப்பலுக்கு வாக்களித்து வாழ்வை வளப்படுத்துவதோடு இருப்பையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்' - என்றார். (ம)

# போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் இன்ஸ்பெக்டர் நேற்று சரண்

கொழும்பு, ஜூலை 8

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகரை கைது செய்வதற்கு உதவுமாறு பொலிஸார் மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபராக இனங்காணப்பட்டுள்ள பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் குறித்து தற்போது விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

குறித்த பொலிஸ் பரிசோதகர் வெலிவேரிய பகுதியைச் சேர்ந்த வெஹெரவத்த கங்கானமலாகே வசந்த குமார எனும் 49 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபரின் ஒளிப்படத்தை வெளியிட்டுள்ள பொலிஸ் ஊடகப் பிரிவு அவரைக் கைது செய்வதற்கு உதவுமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

குறித்த சந்தேகநபர் நேற்றுக் காலை கடவத்தை பொலிஸில் சரணடைந்த நிலையில் கைதுசெய்யப்பட்டார். அவரை குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலைப்படுத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம)

# தே.அ.அட்டை இல்லாத வாக்காளர் உடனடியாக பெறுவதற்கு ஏற்பாடு

## உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 8

தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் தமக்குரிய தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்காக, கிராம சேவையாளர் ஊடாக உடனடியாக விண்ணப்பிக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு தேர்தல் விதிமுறைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் பொதுத் தேர்தலில் 2019ஆம் ஆண்டுக்குரிய தேர்தல் இடாப்பு பயன்படுத்தப்பட உள்ளது. 2019ஆம் ஆண்டுத் தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளவர்கள் இந்த முறை தேர்தலில் வாக்களிப்பதற்கு உரிமை உள்ளவர்கள். அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் அடையாளத்தைச் சமர்ப்பித்து தமது வாக்களிப்பை மேற்கொள்ள முடியும். பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் அடையாளமாக அடையாள அட்டை, வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம், கடவுச்சீட்டு மற்றும் ஆள் பதிவு திணைக்களத்தினால் மத குருமாருக்கு என வழங்கப்பட்ட அடையாள அட்டை, சமூக சேவை திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற முதியோர் அடையாள அட்டை போன்றவற்றைப் பயன்படுத்த முடியும்.

இத்தகைய எந்தவொரு ஆவணமுமில்லாத ஒருவர் தற்காலிகமாக தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டையைப் பயன்படுத்தி வாக்களிக்க முடியும். ஜூலை மாதம் 17ஆம் திகதி வரைக்கும் ஆட்பதிவுத் திணைக்களத்தினுடைய தரவுத் தளத்திலுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக உட்சேர்க்கப்பட்ட சகல தேசிய அடையாள அட்டை விண்ணப்பதாரர்களுக்கும் அடையாள அட்டையை தேர்தலுக்கு முன்னர் விநியோகிப்பதற்குரிய நடவடிக்கையை ஆள்பதிவு திணைக்களம் முன்னெடுத்துள்ளது - என்றார். (ம)



## 3 தடவைகள் உலகைச்சுற்றும் தூரத்தை

# பணம் செலுத்தாமல் பயணித்த மைத்திரி!

கொழும்பு, ஜூலை 8

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஐந்து வருட ஆட்சிக் காலத்தில் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்தி ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 277 கிலோ மீற்றர் தூரம் பயணித்தமை அம்பலமாகியுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கொழும்பு பத்திரிகை ஒன்று இலங்கை விமானப்படை தலைமையகத்தில் இருந்து பெற்றுக் கொண்ட தகவல்களுக்கு அமையவே இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது அவருக்கு அதிமுக்கிய பிரமுகருக்கான உலங்கு வானூர்திகளே இலங்கை விமானப் படையால் வழங்கப்பட்டன. அதன்படி அவர் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான எம்ஐ17 உலங்குவானூர்திகளை 535 தடவைகளும், பி 412 உலங்கு வானூர்திகளை 22 தடவைகளும் பயன்படுத்தியுள்ளார்.

இதன்படி சராசரியாக வருடம் ஒன்றுக்கு 111 தடவைகள் உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்தியுள்ள சிறிசேன 70 ஆயிரத்து 884 கடல் மைல் தூரம் (அதாவது ஒரு இலட்சத்து 31ஆயிரத்து 277.17 கிலோ மீற்றர்) பயணம் செய்துள்ளார். அத்துடன் அவர் மேற்கொண்ட 557 பயணங்களுக்கும் எந்தவிதமான கட்டணங்களையும் செலுத்தவில்லை. இந்த பயணங்களுக்கான காரணங்களை விமானப்படை தலைமையகம் வழங்க மறுத்திருக்கின்றது. இந்த பயணங்களின் அடிப்படையில் பார்க்கும் போது மத்திய ரேகை வழியாக புவியை மூன்று தடவைகள் சுற்றிவரும் தூரத்துக்குப் பயணித்துள்ளார் மைத்திரிபால சிறிசேன. (ம)

# கடந்த ஆட்சியில் அமைச்சுப் பதவிகளை கூட்டமைப்பு பொறுப்பேற்றிருக்க வேண்டும்

## முல்லைத்தீவுப் பரப்புரையில் பெரமுன வேட்பாளர் சாடல்

மைத்திரி - ரணில் கூட்டு ஆட்சியின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு 4 அமைச்சுக்கள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் இருந்தது. எனினும் அவர்கள் அதை தவறவிட்டிருந்தனர். ஆனால் அமைச்சுப் பதவியை அவர்கள் பெற்றிருக்க வேண்டும். அதன் மூலம் இங்கு பல்வேறு அபிவிருத்திகளை உருவாக்கியிருக்கலாம் இவ்வாறு தெரிவித்தார் பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளரான ஜனக்க நந்தகுமார்.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுமக்கள் முன்னணியின் தேர்தல் பரப்புரையில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் உங்கள் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு நாடாளுமன்றம் சென்றவர்கள் மக்களுக்கு நன்றி சொல்வதற்காகவேனும் கிராமங்களுக்கு வந்துள்ளார்களா?

கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நாடாளுமன்றம் சென்றபோது அன்று ஆட்சியில் இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நான்கு அமைச்சுக்களை கூட்டமைப்புக்கு வழங்கத் தயாராக இருந்தனர். ஆனால் கூட்டமைப்பினர் அதை நிராகரித்தனர்.

மக்களிடம் வாக்குகளைக் கேட்கும்போது நல்ல ஜனாதிபதி உள்ளார். நாடாளுமன்றம் சென்று மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கின்றோம் என்று சொன்னவர்கள்தான் அமைச்சுப் பதவியினை வேண்டாம் என்று சொன்னார்கள்.

அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்றால் வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய வேலைவாய்ப்பு பிரச்சினையை நிறைவேற்றி இருக்கமுடியும். மக்களின் அடிப்படை அபிவிருத்தி பணிகள் அனைத்தையும் செய்திருக்கமுடியும். தமிழ் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்காத ஒரே காரணத்தினால்தான் வன்னியில் மக்கள் இன்றும் கஷ்டத்தில் இருக்கின்றார்கள் - என்றார். (ம-19)



# 19ஆவது திருத்தம் நீங்கும் என்கிறார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, ஜூலை 8

பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று 19ஆவது திருத்தத்தை நீக்குவோம் இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

வீரக்கெட்டிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்படும் முறையில் மாற்றம் மேற்கொள்ளுதல், 19ஆவது திருத்தத்தை நீக்குதல், அரசமைப்பில் மாற்றம் மேற்கொள்ளுதல் போன்ற பிரதான விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மூன்றில் இரண்டு அதிகாரம்கொண்ட சிறந்த வெற்றியை சாத்தியமாக்க பொதுமக்கள் முன்னணி முயற்சிக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டுள்ளமையால் பெருந்தொகையானோர் பொதுமக்கள் முன்னணியுடன் இணையவுள்ளனர். அனைவரையும் இணைத்துக் கொண்டு மூன்றில் இரண்டு சிறந்த வெற்றியை நோக்கி பயணிக்கும் முக்கியமான சந்தர்ப்பம் இதுவாகும் - என்றார். (ம)


# இலங்கைக் கடல் எல்லையில் இறுக்கமான கண்காணிப்புகள்

கொழும்பு, ஜூலை 8

வெளிநாடுகளில் இருந்து கடல் மார்க்கமாக நாட்டிற்குள் வரும் நபர்களைகைது செய்தல் மற்றும் கடல் எல்லைகளைப் பாதுகாத்தல் தொடர்பிலான சிறப்பு வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் கொரோனாப் பெருந்தொற்றுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. எனினும் ஏனைய நாடுகளில் இருந்து இலங்கைக்குள் அத்துமீறி நுழையும் குடியேற்ற வாசிகளால் அல்லது ஊடுருவிகளால் இங்கு கொரோனா இரண்டாவது அலை ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று எச்சரிக்கப்பட்டது. இலங்கைக்கு மிக அருகில் உள்ள இந்தியாவில் கொரோனாத் தொற்று பெரியளவில் உருவெடுத்துள்ளமை இலங்கைக்கும் ஆபத்து என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இதையடுத்தே இலங்கைக் கடல் எல்லைகள் கடந்த சில வாரங்களாக தொடர்சியாக இறுக்கமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. (ம)

**பொருளாதார வசதியுடன் கூடிய மாணவர்கள் தமது வசதிகளை எவ்வாறு பிரயோகித்தோம் என சக மாணவர்களிடம் பெருமையுடன் பேசுவார்கள். ஆனால் ஏழை மாணவர்கள் வாய் மூடி மௌனிகளாக இருப்பார்கள். ஆனால் தமது நிலை கண்டு வேதனையடைவார்கள். இதற்கு பாடசாலை நிர்வாகம் முக்கிய இடத்தினைக் கொடுத்து மாணவர்கள் பாதிக்கப்படாது தட்டிக்கொடுத்து கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்க வேண்டும்.**



# கொரோனாவும் பாடசாலைகள் எதிர்கொள்ளவுள்ள சவால்களும்

பழனித்துரை தர்மகுமாரன்,
ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி.

கொரோனா வைரஸின் தாக்கத்தினால் மூடப்பட்ட பாடசாலைகள் தற்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு மேலான விடுமுறை ஆசிரியர்கள்,மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை கட்டிப்போட்டதுடன் உடல்,உள ரீதியாக பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் போது முரண்பா டான செயற்பாடுகள் ஆரம்பத்தில் துளிர்விடப் பார்க்கும்.

இதனைப் பாடசாலை நிர்வாகம் ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த சிறந்த திட்டமிடலை மேற் கொண்டு மாணவர்கள் பாதிப்படையாது சமநிலையான நேர்த் தன்மையான சிந்தனையை ஏற்படுத்த வேண்டியது ஆசிரியர்களின் தலையாய கடமை ஆகும்.


ஏனெனில் மாணவர்கள் கொரோனா விடுமுறையில் கற்றல் செயற்பாட்டைத் தமது பொருளாதார வசதிகளுக்கு ஏற்ப, இணையப் பாவனை மூலமும் தொலைபேசியின் மூலமும் மடிக் கணினி மூலமும் தொலைக் காட்சி மூலமும் மேற்கொண்டிருந்தனர். அதிலும் நிகழ்நிலை மூலம் அதிக மாணவர்கள் கல்வி கற்றனர்.

இதற்கு மாறாக வயிற்றுப்பசியை போக்கவே செய்வதறியாது தவித்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் உயிரைத்தக்க வைத்துக்கொள்ளவே பெரும் போராட்டத்தை நடத்தவேண்டியிருந்தது. இவ்வாறான சூழ்நிலையில் அவர்கள் கொரோனா விடுமுறையில் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடவில்லை என்பதை உணர்ந்து செயலாற்ற ஆசிரியர்கள் முனையவேண்டும்.

பொருளாதார வசதியுடன் கூடிய மாணவர்கள் தமது வசதிகளை எவ்வாறு பிரயோகித்தோம் என சக மாணவர்களிடம் பெருமையுடன் பேசுவார்கள். ஆனால் ஏழை மாணவர்கள் வாய் மூடி மௌனிகளாக இருப்பார்கள். ஆனால் தமது நிலை கண்டு வேதனையடைவார்கள். இதற்கு பாடசாலை நிர்வாகம் முக்கிய இடத்திணைக் கொடுத்து மாணவர்கள் பாதிக்கப்படாது தட்டிக்கொடுத்து கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்க வேண்டும்.

மாறாக ஆசிரியர்களும் கொரோனா விடுமுறையில் வினாக்கள் அனுப்பினோம்,குறிப்புக்கள் அனுப்பினோம் என்றுவிட்டு, மேம்போக்காக நடக்காமல், பாடசாலை மூடப்பட்ட காலத்தில் விடப்பட்ட பாடத்தில் இருந்து மீளக் கற்கைகளை ஆரம்பிக்க வேண்டும். மாணவர்கள் பாதிப்படையாத வகையில் ஆசிரியர்களின் சொல்,செயல் என்பன அமைய வேண்டும். மாறாக வெந்த புண்ணில் வேல்பாய்ந்தது போல் செயற்படக்கூடாது.

ஆசிரியர்கள் அதி உச்ச அர்ப்பணிப்புத் தன்மையை வெளிப்படுத்த வேண்டிய காலமாகவும் தூய்மையான சிந்தனையை செயல்படுத்தும் காலமாகவும் இதனைப் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் பாடசாலைகளை மீள ஆரம்பித்த விடயம் பெற்றோர் மத்தியில் அவ்வளவு திருப்தியான விடயமாகக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் இன்னும் கொரோனா வைரஸ் தாக்கம் முற்று முழுதாக கட்டுப்படுத்தப்படவில்லை. மூன்று மாதகாலமும் தற்காப்பிலேயே ஈடுபட்டோம் . இனிவரும் காலத்திலும் கொரோனாவுடன் வாழப்பழகிக் கொள்ளப்போகிறோமே தவிர அதனை முற்றாக ஒழிப்பதென்பது இப்போதைக்கு இயலாதவிடயம். கொரோனாத் தொற்று ஏற்படாத வகையில் எம்மை நாம் பாதுகாக்க வேண்டுமெனில் சுய சுத்தம்,தனியாள் இடைவெளி, முகக்கவசம் அணிதல் என்பவற்றைத் தொடர்ச்சியாகப் பேணி வருதல் வேண்டும். அதிலும் கை கழுவுதல் என்பது மிகவும் முக்கியமானது.



ஆனால் துரதிர்ஷ்டவசமாக கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் பாடசாலைகளுக்கு போதிய நிதியை ஒதுக்காமல், கைவிரித்துவிட்டது. எனவே பாடசாலைகளே அதற்குரிய நிதியைக் கண்டு பிடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. உடல் வெப்பத்தை அளவிடும் இரண்டு கருவிகள் ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்படும் என அறிவித்த அரசு தற்போது ஒரு பாடசாலைக்கு ஒரு கருவி என்ற ரீதியிலேயே அனுப்பிவைத்துள்ளது.

தனியாள் இடைவெளியைப் பேண வேண்டுமென்ற நோக்கத்தோடு, மாணவர்கள் பாடசாலைக்குள் நுழைவதற்கு மூன்று, நான்கு பாதைகளை உருவாக்கியுள்ள பாடசாலைகள் தற்போது உடல் வெப்பத்தை அளவிடும் கருவிகள் போதாமையால் திரிசங்கு சொர்க்க நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.



தனியாள் இடைவெளி என்பது கட்டாயமானது. ஆனால் மாணவர்கள் வீட்டில் இருந்து புறப்பட்டுதல், வீதியில் பயணித்தல்,பாடசாலைக்குள் நுழைதல், வகுப்பறையில் அமர்தல், கல்விகற்றல் பின் வீடு திரும்புதல் என்பவற்றின் போதும் தனியாள் இடைவெளியைப் பேணவேண்டும்.

இதனைப் பெற்றோர், போக்குவரத்து சேவையில் ஈடுபடுவோர், ஆசிரியர்கள் கரிசனையுடன் கவனிக்க வேண்டும். அதுமட்டுமன்றி பாடசாலை நிர்வாகத்துக்கும் அதிக சுமை உள்ளது. கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் மாணவர்களின் சுகாதாரப் போசாக்கு நடத்தைகள் என்பவற்றிலும் அதிக கவனமெடுத்தலுடன் கை கழுவுதலை, தனியாள் இடைவெளியுடன் பின்பற்ற நடைமுறைப்படுத்துதல்.

குறைந்தபட்சம் ஐம்பது மாணவர்களுக்கு ஒரு கைகழுவும் இடம் அமைத்தல் வேண்டும். இதனால் அதிக மாணவர்கள் உள்ள பாடசாலைகளில் இருபதுக்கும் மேற்பட்ட கை கழுவும் நிலையம் இருககும் .இங்கு வெளியேறும் நீரினை பாதுகாப்பாக தேங்காத வகையில் அகற்ற வேண்டும். இல்லையேல் டெங்கு நுளம்பு பரவும் இன்னொரு அபாயம் உருவாகும்.

கிராமப்புற பாடசாலைகளில் நீரைப் பெறுவதும் தட்டுப்பாடாக இருக்கும். இதனால் தினமும் கைகழுவுதல் அங்கு பெரும் பிரச்சினையாக இருக்கும். எனவே கொரோனாத் தொற்றை விடவும், அதற்கு எதிரான பாதுகாப்பை ஏற்படுத்தி தற்காத்துக் கொள்வதென்பது கல்வித் திணைக்களத்துக்கும் பாடசாலை நிர்வாகத்துக்கும் தினம் தினம் நெருக்கீடாகவே காணப்படும்.

கொரோனாவின் இரண்டாம் அலை என்பது மிக மோசமானது என வைத்தியவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதிலிருந்து விடுபடுவதற்கும் தற்காத்துக்கொள்வதற்கும் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை மாணவர்கள், பெற்றோர்கள் சரியான முறையில் கடைப்பிடித்து பாடசாலை நிர்வாகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினால் கொரோனா என்னும் கொடிய வைரஸ் எம்மை நெருங்காது.

# கொரோனா அபாயம் இன்னும் நீங்கவில்லை

## எச்சரிக்கிறார் மருத்துவர் அனில் ஜாசிங்க

**கொழும்பு, ஜூலை 8**

**இலங்கையில் தற்போது கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் உள்ளபோதும் வெளிநாடுகளில் இருந்து வரும் நபர்கள் மூலம் கொரோனா பரவும் ஆபத்து இன்னும் குறையவில்லை. இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். இதனால் தொடர்ந்தும் சுகாதார பாதுகாப்பு முறைகளைக் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.**



நாடாளுமன்ற செயலாளர் தம்மிக தசநாயக்க பிரதிச் செயலாளர் மற்றும் நாடாளுமன்ற ஊழியர்கள் குழுவின் பிரதானி நீல் நித்தவெல்ல உட்பட நாடாளுமன்றதிணைக்கள அதிகாரிகளை நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சில் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் நாடாளுமன்றம் கூடும் நேரங்களில் சுகாதார பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு கூட்டங்களை நடத்த வேண்டும். இது குறித்து முறையாக கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்க சுகாதார அமைச்சின் அதிகாரிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். முதல் நாள் நாடாளுமன்றம் கூடும் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல ஊழியர்களும் சுகாதார பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்பதால் சுகாதார அதிகாரிகளிடம் சரியான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். ஏற்கனவே சமூக இடைவெளி, கைகளைச் சுத்தப்படுத்துதல், உடல் உஷ்ணத்தை அளவிடுதல் உட்பட சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொள்ள அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக ஊழியர்களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டங்கள் இணையத்தளம் வழியாக நடத்தப்படுகின்றன - என்றார். (ஐ)

# கொழும்பில் தமிழ்க் கட்சியொன்றை உருவாக்கி வழிநடத்துவது அவசியம்

## ஐ.ம.ச. வேட்பாளர் ஜனகன்

பெரும்பான்மை மக்கள் வாழ்கின்ற கொழும்பு மாவட்டத்தில் தமிழ்க் கட்சியொன்றை உருவாக்கி அதனை வழிநடத்துவது என்பது மிகப்பெரிய வெற்றியாகும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு மாவட்ட வேட்பாளர் கலாநிதி வி.ஜனகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்குக் கிழக்கிலோ அல்லது மலையகத்திலோ எமது தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழ்வதனால் அங்கு தமிழ் கட்சிகளை உருவாக்குவதில் எந்தவித சவாலும் இருக்காது. கொழும்பு மாவட்டம் என்ற அடிப்படையில் நோக்கும் போது தமிழர்களும், முஸ்லிம்களும் ஏறக்குறைய10 சதவீதத்தில்தான் வாழ்கிறார்கள். 14 லட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் கொழும்பு மாவட்டத்தில் உள்ளார்கள் என்று கணக்கிட்டால் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை 2 லட்சத்துக்கும் குறைவாகத்தான் இருக்கின்றது. டினவே இந்த சிறிய வட்டத்திற்குள் எமது பிரதி நிதித்துவத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கே நாங்கள் முயற்சிக்க வேண்டும். இந்த சூழ்நிலையில் ஒரு தமிழ்க் கட்சியை உருவாக்கி, எமது மக்களுக்கான ஒரு சக்தியாக வழங்கியிருப்பது தமிழ் பேசும் மக்களுக்கு மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது - என்றார். (ஐ)

# ஆட்சி அமைத்தால் விசாரணை நிச்சயம்

## பிரதமர் மஹிந்த உறுதி

கொழும்பு, ஜூலை 8

அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பில் அமையவுள்ள எமது அரசில் விசேட விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசில் அரசியல் பழிவாங்களுக்காகவே எப்.சி.ஐ.டி. அமைக்கப்பட்டது. அரசியல் பழிவாங்களுக்கான திட்டமிடல்களை மக்கள் விடுதலை முன்னணியினர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினர் முன்னின்று முன்னெடுத்தார்கள். இதன் பலனை தற்போது அனுபவிக்கின்றார்கள். பெரும்பாலான அரச சார்பற்ற அமைப்புக்கள் கடந்த காலங்களில் சர்வதேச நாடுகளில் நிதி பெற்று அரசுக்கு எதிரான தவறான பிரசாரங்களை மேற்கொண்டமை குறித்து விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்படும். சர்வதேச நாடுகளில் இருந்து எக்காரணிகளுக்காகப் பெரும்பாலான நிதி கிடைக்கப் பெறுகின்றன என்பது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படும் - என்றார். (ப)

# பௌத்த தர்மம் நாட்டில் இல்லை

## ஹர்ஷ அல்விஸ் கவலை

கொழும்பு, ஜூலை 8

எமது நாட்டில் தற்போது பௌத்த தர்மம் இல்லை. நாட்டின் ஜனாதிபதியான கோத்தாபய ராஜபக்ஷவுக்கு அனைத்து மதங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் உண்டு. இவ்வாறு ஒக்கொம வெசியோ ஒக்கொம ரஜவரு கட்சியின் பொருளாளரும் தேசிய அமைப்பாளருமான ஹர்ஷ அல்விஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது கட்சியின் பிரதான நோக்கமானது தன்னைத் தானே கட்டுப்படுத்தி ஆள வேண்டும். தன்னைத் தானே கட்டுப்படுத்த முடியாமல் போனதாலேயே கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்று எனும் உயிர்கொல்லும் நோய் தோன்றியது. நாம் முறையாக எம்மைக் கட்டுப்படுத்தியிருந்தால் கொரோனா வைரஸ் பரவுதலை கட்டுப்படுத்தியிருக்கலாம்.

எமது நாட்டில் பிரேமதாச, சந்திரிகா, மஹிந்த போன்றோர் ஆண்டனர். இவர்கள் அனைவரும் நாட்டுக்கு ஏதே னும் நன்மைகளை செய்துள்ளனர். தற்போது நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு புது முகங்களை அனுப்ப மக்கள் விரும்புகின்றனர். பழையவர்கள் நாடாளுமன்றில் அமர்ந்திருந்தது போதும் என்று நினைக்கிறார்கள். ஜனாதிபதியும் புதிய முகங்களை விரும்புகிறார்.

எமது நாட்டில் பல இனத்தவர்கள், மதத்தவர்கள் வாழ்கிறார்கள். இவர்களைப் பாதுகாத்து வழிநடத்த வேண்டியது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பொறுப்பாகும். எமது நாட்டுக்கு சிறந்த ஆட்சியை நடத்திச் செல்லும் எவரேனும் ஒருவருக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

இந்நாட்டில் சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்களுக்கு என பொதுவான தலைவர் ஒருவர் இல்லை. எங்களிடம் சில பிரச்சினைகளை வைத்துக்கொண்டு, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக பேசுவதில் பிரயோசனமில்லை - என்றார். (ஐ)

# அனைவரையும் ஒருங்கிணைக்க ஈரோஸ் பாடுபடும்!

யாழ்ப்பாணம், ஜூலை 8

அனைத்துத் தமிழ் தரப்புக்களையும் ஒன்றிணைக்க ஈரோஸ் அமைப்பு பாடுபடும் என்று அவ்வமைப்பின் தலைவர் அருளப்பு இராசநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது அது தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வைக் கொண்டுவரும் என நம்பியிருந்தோம். ஆனால் அவ்வாறு ஏதும் நடக்கவில்லை. தற்போது மூன்று தரப்புக்களாக தமிழ் தரப்புக்கள் பிரிந்து நிற்கின்றன. இவ்வாறு பிரிந்து நிற்பதால் தமிழ் மக்களுக்கு ஏதும் கிட்டப்போவதில்லை. அனைத்துத் தரப்புக்களையும் இணைந்து தமிழ் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தரவே ஈழவர் ஜனநாயக முன்னணி தேர்தல் களத்தில் குதித்துள்ளது-என்றார். (ப-20)

# கொழும்பு நீதிமன்றத் தீர்மானம் சட்டத்துக்கு முரணானது

## சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றை நாடினார் ரஞ்சித்

தான் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் 99 பேரின் கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்ய அக்கட்சியின் செயற்குழு எடுத்த முடிவும், அம்முடிவு அமுல் செய்யப்படுவதை தடுத்து இடைக்காலத் தடை உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்மானமும் சட்டத்துக்கு முரணானது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

ரஞ்சித் மத்தும பண்டாரவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்தது. எனினும் இது குறித்த முறைப்பாட்டு மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானித்திருந்த நீதிமன்றம் அன்றைய தினம் மன்றில் முன்னிலையாக மனுவின் பிரதிவாதிகளான ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரம சிங்க, உப தலைவர் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கு அறிவித்தல் அனுப்பியது.

மனுதாரர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி இக்ராம் மொஹம்மட் முன்வைத்த வாதங்கள், பிரதிவாதிகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகில விராஜ் காரியவசம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரேலண்ட் பெரேரா முன்வைத்த வாதங்களுக்கு அமைய கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி இடைக்கால தடை கோரிக்கையை நிராகரித்திருந்தார். இந்த இடைக்காலத் தடையை கோரும்போது, முறைப்பாட்டாளர் தரப்பு சம்பவ விடயங்களை மறைத்து குறித்த இடைக்காலத் தடையை கோரியுள்ளமை தெளிவாகிறது. எனவே இடைக்கால தடை உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையை நிராகரிக்கின்றேன்.' என மாவட்ட நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டிருந்தார். இந் நிலையிலேயே மாவட்ட நீதிமன்றின் தீர்ப்புக்கு எதிராக மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்துக்கு மேன் முறையீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கை கிரிக்கெட் அதிரடி;

# மஹிந்தானந்தவுக்கு எதிராக நடவடிக்கை

**கொழும்பு, ஜூலை 8**
**2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டத்தில் ஆட்டநிர்யணம் இடம்பெற்றது. இதனால்தான் இலங்கை அணி தோற்றது என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த தெரிவித்திருந்த நிலையில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு வீரர்கள் தயாராகியுள்ளனர் என்று தெரியவருகின்றது.**



அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் மஹிந்தானந்த இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். இதையடுத்து உலகக்கிண்ணத் தொடருக்கான அணிக்குத் தலைமைதாங்கிய குமார் சங்கக்கார மற்றும் சில வீரர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதற்கு இலங்கை முழுவதும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. வீரர்களுக்கு எதிராக விசாரணையை நிறுத்துமாறு வலியுறுத்தி கொழும்பில் ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இதையடுத்து, மஹிந்தானந்தவின் குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரம் இல்லை. விசாரணையில் வீரர்கள் வழங்கிய பதில் திருப்திகரமாக உள்ளது எனத் தெரிவித்து விசாரணை நிறுத்தப்பட்டது. இதையடுத்தே மஹிந்தானந்தவுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள வீரர்கள் தயாராகியுள்ளனர் என்று தெரியவருகின்றது. (ம)

## 115,000 பி.சி.ஆர். இதுவரை!

கொழும்பு, ஜூலை 8
கொரோனா வைரஸ் தொற்றினைக் கண்டறிவதற்காக இதுவரை சுமார் ஒரு லட்சத்து 15 ஆயிரம் பி.சி.ஆர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான பி.சி.ஆர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்றுமுன்தினம் மட்டும் ஆயிரத்து 290 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனைகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 15 ஆயிரத்தை நெருங்கியது. (ம)

## குளவிகளால் அச்சநிலை அகற்றுவதற்குக் கூட்டம்!

### *மன்னாரில் இந்த நிலை*

மன்னார், ஜூலை 8
மன்னாரில் பாடசாலைகள் உட்பட சில முக்கிய இடங்களில் குளவிக் கூடுகள் அமைந்துள்ளமையால் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றை அகற்றுவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் எஸ்.குணபாலன் தலைமையில் நேற்றுமுன்தினம் அவசரக் கூட்டம் இடம்பெற்றது.
மன்னார் கல்வி வலய பாடசாலைகளான முசலி முஸ்லிம் மத்திய வித்தியாலயம், நானாட்டான் ஆரம்ப பாடசாலை, முருங்கன் ஆசிரியர் மத்திய நிலையம் ஆகியவற்றிலும், மடு கல்வி வலையத்தில் விடத்தல்தீவு புனித யோசவ்வாஸ் பாடசாலை, மடு வலய அலுவலகம் மற்றும் கட்டையடம்பன் பாடசாலை ஆகியவற்றிலும் மன்னார் மாவட்ட செயலகத்திலும், இரணை இலுப்பைக் குளத்து பகுதியில் பல்வேறு மின்கம்பங்களிலும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய குளவிக் கூடுகள் அமைந்துள்ளன.
இது தொடர்பாக மன்னார் மாவட்டச் செயலர் மற்றும் மன்னார் மாவட்ட இடர்சேவைகள் திணைக்களத்துக்குத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் மாவட்டச் செயலகத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.
வன இலாகாவினருடன் இராணுவத்தினரும் இணைந்து குழவிக் கூடுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. துரித கதியாக மின்கம்பங்களில் அமைந்துள்ள குளவிக்கூடுகளை அகற்றத் தீர்மானிக்கப்பட்டது. (ம-60)



## கொரோனா குறித்த பரிந்துரையை மறுஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்

### உலக சுகாதார நிறுவனத்துக்கு மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8
உலக சுகாதார நிறுவனம், கொரோனா பெருந்தொற்றுக் குறித்த தனது பரிந்துரைகளை மறுஆய்வு செய்யவேண்டுமென நூற்றுக்கணக்கான மருத்துவ ஆய்வாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.
கொரோனா கிருமியின் நுண்ணிய துளிகள், காற்றில் பரவி மனிதர்களுக்குத் தொற்றும் ஆற்றல் படைத்தவை என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் உள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர்.
கொரோனா வைரஸ் காற்றுமூலம் பரவாது என்று உலக சுகாதார நிறுவனம் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில் இவ்வாறான எச்சரிக்கை விடுக்க ப்பட்டுள்ளது.
கொரோனா கிருமி, முக்கியமாக மனிதரிடமிருந்து மனிதருக்குப் பரவுவதாக உலக சுகாதார நிறுவனம் கூறிவருகிறது.
குறிப்பாக தனிநபர்களின் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் தெறிக்கும் திரவத்துளிகள் மூலமாகவே அது பரவுகிறது. கொரோனா கிருமியால் பாதிக்கப்பட்ட ஒருவர் இருமும்போதும் தும்மும்போதும் அவரிடமிருந்து கிருமி வேகமாகப் பரவுகிறது. ஆனால், காற்றில் தேங்கியுள்ள நுண்ணிய கிருமி களும் ஒருவருக்குத் தொற்றிக்கொள்ளும் என்பதற்கு ஆதாரம் உள்ளது - என்று அவர்கள் தமது எச்சரிக்கைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளனர். (ம)

## மாஸ்க் அணியாமல் சாரதிப் பயிற்சிகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 8
முற்றவெளிப் பகுதியில் சாரதிப் பயிற்சியில் ஈடுபட்ட சிலர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் பயிற்சியில் ஈடுபட்டதை அடுத்து அவர்கள் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.
சாரதிப் பயிற்சிக்கு முகக்கவசம் அணிவதற்கு விதி விலக்கு வழங்கப்படவில்லை. ஆதலால் பயிற்சியில் ஈடுபடுவதாக இருந்தால் முகக் கவசம் அணிந்தே பயிற்சியில் ஈடுபட வேண்டும். இல்லாவிடில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## திடீர் கோடீஸ்வரர்கள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகள்!

கொழும்பு, ஜூலை 8
இலங்கையில் திடீரென கோடீஸ்வரராகிய நபர்கள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தவறான முறையில் பணம் சேகரித்த நபர்கள், போதை வர்த்தகர்கள் மற்றும் திடீரென பணக்காரர்களாகிய வர்த்தகர்கள் தொடர்பில் இரகசிய விசாரணையை ஆரம்பித்துள்ளதாக சிரேஷ்ட பாதுகாப்புப் பிரதானி தெரிவித்துள்ளார்.
இந்த விசாரணையில் திடீரென சொத்துக்கள் சேகரித்த நபர்கள் தொடர்பில் இரகசிய அறிக்கை தயாரிக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.
அதன்படி சட்டவிரோத போதை பொருள் வர்த்தகர்கள், ஆயுத வர்த்தகர்கள், பயங்கரவாத செயல்கள், சைபர் மோசடியாளர்கள், இலஞ்சம் பெறுபவர்கள், உட்பட மோசடியான முறையில் பணம் சேகரித்த நபர்கள் தொடர்பில் பொலிஸ் பிரிவில் பல தகவல்கள் சேகரிக்கப்படவுள்ளன. பொலிஸ் விசேட பிரிவிற்கு மேலதிகமாக அரச புலனாய்வு பிரிவினர், முப்படை புலனாய்வுப் பிரிவினரால் குறித்த அறிக்கையை சேகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்தத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)



## குடமுழுக்கு

கோண்டாவில், ஜூலை 8
கோண்டாவில் கிழக்கு பொற்பதி ஸ்ரீ சிவமாகாளி அம்மன் ஆலய (பழைய காளிகோவில்) குடமுழுக்கு கடந்த வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.
குடமுழுக்கைத் தொடர்ந்து தினமும் காலை 9 மணிக்கு மண்டலாபிஷேகம் நடைபெற்றுவருகிறது.
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி சங்காபிஷேகமும், மாலை ஸ்ரீவிஸ்வநாதர் திருக்கல்யாணமும், அம்பாள் திருவூஞ்சலும் இடம்பெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

போக்குவரத்து விதிமீறல்

# 11 பேருக்கு 4 லட்சம் ரூபா தண்டம்

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 11 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 3 லட்சத்து 92 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் நீதிமன்றில் போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்தினார்களென குற்றஞ்சாட்டி, 11 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
வழக்குகள் நேற்று செவ்வாய்க்கிழமை தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரம், வாகனவரிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 77 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும், மது போதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், மேலும் இருவருக்கு தலா 30 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

கொரோனா அச்சம்:

# வெலிக்கடை கைதிகளை பார்வையிடத் தடை

**கொழும்பு, ஜூலை 8**
**வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகளைப் பார்வையிடச் செல்வோருக்கு தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
குறித்த கைதி போதைப் பொருள் மறுவாழ்வு மத்திய நிலையமான கந்தக்காடு மறுவாழ்வு மத்திய நிலையத்தில் இருந்து கடந்த 27ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துவரப்பட்டிருந்த நிலையிலேயே கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்.
இதனையடுத்து, குறித்த கைதியுடன் தொடர்பில் இருந்தவர்கள், கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

## நல்லூர் பிரதேசத்தில் மரக்கன்றுகள் நடுகை

யாழ்ப்பாணம், ஜூலை 8
நல்லூர்பிரதேச சபைக்கு உட்பட்ட மயானங்களில் நிழல் தரும் மரக்கன்றுகள் நடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
நேற்று செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி பாற்பண்ணை வீதியில் உள்ள மயானத்தில் நிழல் தரும் கொண்டல், கமுகு போன்ற மரங்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.
மழை பெய்ய ஆரம்பித்ததும் கூடுதலான மரக்கன்றுகளை இம்முறை நடுகை செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என நல்லூர் பிரதேச சபை தெரிவித்துள்ளது.
கடந்த ஆண்டில் சபைக்கு உட்பட்ட பகுதியில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## ஏமாற்று அரசியல் கலாசாரத்துக்கு தமிழர் முற்றுப்புள்ளியிட வேண்டும்

*மட்டு. மொட்டு வேட்பாளர் தெரிவிப்பு*

மட்டக்களப்பு, ஜூலை 8
மட்டக்களப்பு, மாவட்ட தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு பொதுத் தேர்தலின் பிற்பாடு உடனடியாகத் தீர்வைப் பெற்றுத் தருவேன். அதற்கான நடவடிக்கையைத் துரிதமாக முன்னெடுத்து வருகின்றேன். தமிழ் மக்கள் ஏமாற்று அரசியல் கலாசாரத்துக்கு ஒருபோதும் அடிபணியக் கூடாது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் பரமசிவம் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;
பொய் கூறி அரசியலில் வந்தவன் நான் இல்லை. சொல்வதைச் செய்வேன். மட்டக்களப்பு மாவட்டமானது அபிவிருத்தியில் மிகவும் பின்னிலையில் உள்ளது. அவ்வாறான குறைபாட்டைத் தேர்தலின் பிற்பாடு நிறைவுசெய்வேன். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை ஒரு போதும் மீறியவன் நான் அல்ல. என்னால் செய்யக் கூடிய வேலையை முழு மனதுடன் நிறைவு செய்வேன். காரணம் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைப்பாளர் என்ற வகையில் எனக்கு தனிக் கௌரவம் இருக்கின்றது.
ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் எனது கோரிக்கையினை ஏற்றுக் கொள்வார்கள். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. நடைபெறப் போகும் பொதுத் தேர்தல் தமிழ் மக்களின் உரிமையுடன் கூடிய அபிவிருத்திக்கு மிக முக்கியமான தேர்தல். மக்கள் இதுவரைக்கும் விட்ட தவறை மீண்டும் விடக் கூடாது. மாற்றுச் சிந்தனையுடன் மாற்றத்துக்கு வாக்கினை மொட்டுச் சின்னத்திற்கு வழங்க வேண்டும் - என்றார். (ப)

# ஆரம்ப சுகாதார நிலையம் இன்று முதல் மட்டுவிலில்!

சாவகச்சேரி, ஜூலை 8
நுணாவில் பிரதேச கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறுவர்களுக்கான ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுவில், சரஸ்வதி வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள பண்டிதர் சிவலிங்கம் நினைவு இலவச மருத்துவசேவை நிலையத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சு.சுதோகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் திருமதி எஸ். பாக்கியலிங்கம் நாடா வெட்டி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.
நுணாவில் பிரதேச கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறுவர்களுக்கான சிகிச்சைகள் இதுவரை காலமும் நுணாவில் கிழக்கு சர்வோதய சனசமூக நிலையத்தில் நடைபெற்றுவந்தது.
குறித்த நிலையம் தற்போது திருத்த வேலைகள் நடைபெறுகின்றமையால் மட்டுவில் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.
புதிய நிலையத்தில் மாதாந்தம் இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் ஆரம்ப சுகாதார நிலையச் செயற்பாடுகள் இடம்பெறுமெனவும் சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ஐ- 9)

## சுகாதார விதிமுறைகளை கடைப்பிடியுங்கள்

தென்மராட்சி, ஜூலை 8
பாடசாலைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ள நிலையில் கொரோனாவின் தாக்கம் இன்னமும் நீங்காததால் மாணவர்களும் ஆசிரியர்களும் கூடுமான வரை சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்குமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொரோனா வைரஸ் பாதுகாப்புத் தொடர்பில் கல்வி அமைச்சு சில விதிமுறைகளை அறிவித்து வருகின்ற நிலையில் எம்மை நாமே பாதுகாப்பதே உகந்த வழிமுறையாகும். நாட்டில் கொரோனாத் தொற்று தொடர்பான அச்சம் நீங்கும் வரை மாணவர்கள் உரிய சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். காலையில் பாடசாலைக்கு வரும் ஒவ்வொரு மாணவரும் உரிய கண்காணிப்பின் பின்னர் பாடசாலைக்குள் அனுமதிக்கப்படவேண்டும். காய்ச்சல், இருமல் போன்றவை காணப்படின் சுகாதாரப் பகுதியினருடன் தொடர்புகொள்ள வேண்டும் - என்றார். (ப-9)

## சுகாதார உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8
கொரோனா விடுமுறையை அடுத்து பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு பழைய மாணவரால் சுகாதார தொற்று நீக்கல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
கல்லூரியின்; கொழும்புக் கிளையின் பழைய மாணவர் சங்கத் தலைவர் மகேந்திரனால் உடல் வெப்பத்தை அளவிடும் கருவி மற்றும் ஆயிரம் மு[illegible]கவசங்கள் என்பன [illegible] பட்டுள்ளன.



யாழ். கியூடெக் கரித்தாஸ் முதியோர் குழுவினருக்கான ஒன்றுகூடல் வேலணை சாட்டி ஆலய முன்றிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நாவாந்துறை, சாவல் கட்டு, சோனகத்தெரு, அல்லைப்பிட்டி, சாட்டி பகுதிகளைச் சேர்ந்த 48 முதியவர்கள் இந்த ஒன்றுகூடலில் பங்குபற்றினர். (ம)

## ஹோட்டல் உரிமையாளர் சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூலை 8
தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
பிலியந்தலையில் உள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரே அந்த ஹோட்டல் வளாகத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
அத்துடன் ஹோட்டல் உரிமையாளரின் மனைவி காயங்களுக்குள்ளான நிலையில் களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பிலியந்தலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 3.5 மில்லியன் யூரோவை கையாள்வது எப்படி?

கொழும்பு, ஜூலை 8
சுற்றுலாத்துறையை மீட்டெடுக்க உதவும் வகையில் வழங்கப்பட்ட 3.5 மில்லியன் யூரோவை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்துடன் இலங்கை சுற்றுலாத்துறை கலந்துரையாடி வருகிறது.
இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட மொத்த மானியத்தில் 22 மில்லியன் யூரோ விவசாயம் மற்றும் விவசாயிகளுக்கு உதவுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் சுற்றுலாத்துறைக்காக 3.5 மில்லியன் யூரோ ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஐரோப்பிய ஒன்றியம் சுற்றுலாத் துறைக்கான குறித்த கொடுப்பனவை 4 மில்லியனாக உயர்த்துவது குறித்து ஆலோசித்து வருவதாகவும், தலைமை அலுவலகத்திலிருந்து இறுதி அனுமதி பெறக் காத்திருப்பதாகவும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கிமார்லி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ப)

*ரவி கருணாநாயக்க உள்ளிட்ட*

# 7 பேருக்கு எதிரான பிடியாணை இரத்து

**கொழும்பு, ஜூலை 8**
**முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 7 பேரைக் கைதுசெய்ய கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவு செயற்படுத்துவதை தடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றால் நேற்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

மனுவை விசாரணைசெய்த மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான எ.எச்.ம்.டி. நவாஸ்,ஏ.எல்.சிரான் குணரத்ண. சோபித்த ராஜகருண மனுதாரர்கள் சார்பாக கோட்டை நீதிவான் ரங்க பண்டார வழங்கிய பிடியாணைக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவை வழங்கித் தீர்ப்பளித்தனர்.
கோட்டை நீதிவான் நீதி மன்றத்தால் 7 மனுதாரர்களையும்; 2020 மார்ச் 6 ஆம் திகதி கைது செய்வதற்குப் பிடியாணை உத்தரவு வழங்கப்பட்டது பிணைமுறி மோசடி தொடர்பில் நீதிமன்றினால் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக
வழங்கப்பட்ட பிடியாணை உத்தரவை இடைநிறுத்துமாறு முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக சார்பில் சிரேஸ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவை தாக்கல் செய்தார். ரவி கருணநாயக்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, றியாட் அமீன் மற்றும் பாயிஸா மாகர் ஆகியோர் வாதிட்டனர்.
இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தனது வாதத்தில்,
பிணைமுறி மோசடி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு வழக்கில் தனது துணைவியார் மத்திய வங்கியில் கடமைபுரிவதால், தான் அந்த வழக்கை விசாரணைக்குஎடுக்கமுடியாதெனத் தீர்ப்பளித்தார். கோட்டை நீதிவான் ரங்க பண்டார அதே சம்பவத்தில் தொடர்புடைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுக்கும் மற்றைய ஐந்து மனுதாரருக்கும் எதிராக பொலிஸார் தாக்கல் செய்த வழக்கை விசாரணைக்கு எடுத்து சந்தேகநபர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பித் தமை சட்டரீதியாக பக்கசார்பான செயல்பாடாகும். எனவே அந்தப் பிடியாணை பிறப்பித்த உத்தரவு சட்டரீதியற்றது என தனது கட்சிக்காரரான ரவி கருணாநாயக்க சார்பில் சட்டத்தரணிகளை வாதாட அனுமதிக்காதது இயற்கை நீதிக்கு எதிரான செயல்பாடாகும் எனவும் வாதாடினார்.
மனுவை விசாரணை செய்த மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள், மனுதாரர்கள் சார்பாக கோட்டை நீதிவான் வழங்கிய பிடியாணைக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவை வழக்கு விசாரணை முடியும் வரையும் வழக்கின் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் மனுதாரர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பெற முடியும் ஆனால் கைது செய்ய முடியாது எனவும் வழக்கின் இறுதித் தீர்ப்பு வரும்வரை இந்த இடைக்காலத் தடை உத்தரவு தொடர்ந்து இருக்கும் என்றும் உத்தரவு பிறப்பித்தனர். (ப)

## 125 ஆசனங்களை ஆளும் கட்சியால் பெறமுடியாது

*ஐ.ம.ச வேட்பாளர் லால் காந்த தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 8
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 125 ஆசனங்களைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாது என்று தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் கே.டி.லால் காந்த தெரிவித்தார்.
அத்துடன் தேர்தலின் பின்னர் ஸ்திரமான அரசாங்கத்தை அமைப்பதில் பெரும் சவால்கள் காணப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.
தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;
ராஜபக்ஷக்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் நாடாளுமன்றத் தேர்தலில் தம்மால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப்பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறிக் கொண்டிருந்தனர். தற்போது 125 ஆசனங்களைப் பெறுவோம் என்கின்றனர். ஆனால் 2010 ஆம் ஆண்டு போரை நிறைவு செய்தபோது கூட ராஜபக் ஷக்களால் மூன்றில் இரண்டைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன் - என்றார். (ஐ)

## ஊழலுக்கு எதிராக நுனி விரல் புரட்சி

*சட்டத்தரணி ஹபீப் றிபான் அழைப்பு*

மட்டக்களப்பு, ஜூலை 8
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் இடுகின்ற புள்ளடி ஊழலுக்கு எதிராக விரல் நுனிகளினால் செய்யப்படுகின்ற ஒரு புரட்சியாக இருக்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்டத்தில் ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிடும் சட்டத்தரணி ஹபீப் றிபான் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
இந்த கல்குடா மண்ணுக்கு நான் நேர்மையான பண்பான ஊழல் அற்ற ஒரு தலைவனாக உங்களை வழி நடத்தத் தயாராக இருக்கின்றேன். நீங்கள் இடுகின்ற வாக்கு , போடுகின்ற புள்ளடி உங்கள் விரல் நுனியால் செய்யப்படுகின்ற ஒரு புரட்சியாக இருக்க வேண்டும். அந்தப் புரட்சி உங்கள் பிள்ளைகளுக்கும் உங்கள் பின்னால் வருகின்ற சந்ததிகளுக்கும் நல்ல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
இந்தப் பிரதேசத்தில் பதினேழு வருடங்களாக ஒருவர் அரசியலில் இருக்கின்றார். எத்தனை பேருக்குப் பதவிகள் கொடுத்திருக்கிறார். அவர் ஒரு கட்சியின் தவிசாளர். அவரது கட்சியின் தலைவர் அமைச்சுப் பதவி வகித்த போது அந்த அமைச்சின் கீழ் 48 திணைக்களங்கள் இருந்தன. அதில் ஏதாவது ஒரு திணைக்களத்தில் எமது பிரதேசத்தில் இருந்த ஒருவருக்கு பதவிகள் கொடுத்தார்களா? இல்லை. களுவாஞ்சிக்குடியில் இருப்பவர்களுக்கும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குமே அப்பதவிகளை வழங்குவதற்கு தனது சிபார்சுகளை செய்தார் - என்றார். (ப)



## மாமாங்கேஸ்வரத்தில் மாபெரும் சிரமதானம்

மட்டக்களப்பு, ஜூலை 8
இந்து மக்கள் வழிபடும் பிரபல வழிபாட்டுத் தலமான மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் மட்டக்களப்பு மாநகர சபையின் ஏற்பாட்டில் சிரமதானப்பணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.
இந்தச் சிரமதானப் பணிகளில் மட்டக்களப்பு மாநகர சபையில் கடமையாற்றும் அனைத்து இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமூகங்களைச் சேர்ந்த அலுவலர்களும் இன மத பேதமின்றிக் கலந்து கொண்டனர்.
வருடம் தோறும் மட்டக்களப்பு மாநகர சபையினால் மாமாங்கேஸ்வரர் ஆலய உற்சவ காலத்திற்கு முன்பதாக மேற்கொண்டுவரும் சிரமதானப் பணி இம்முறையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மாநகர முதல்வர் தியாகராசா சரவணபவனின் தலைமையில் ஆரம்பமான இந்தச் சிரமதானப் பணியின் மூலம் ஆலய வளாகம் முழுவதுமாக தூய்மையாக்கல் இடம்பெற்றது.
மட்டக்களப்பு பேராலயங்களில் ஒன்றான மாமாங்கேஸ்வரர் ஆலய திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 20 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது. (ப-150)

## கட்டளையை மீறிய ஓட்டோ மீது சூடு

அனுராதபுரம், ஜூலை 8
அனுராதபுரம் -ராஜாங்கனைப் பிரதேசத்தில் பொலிஸ் கட்டளையை மீறிப் பயணித்த முச்சக்கர வண்டிமீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.
எனினும் அதில்'பயணித்தவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
அனுராதபுரம் - புத்தளம் வீதியில் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று பொலிஸ் கட்டளையை மீறிச் சென்றுள்ளது. இந்த நிலையிலேயெ துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. தப்பிச் சென்றவர்கள் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப)

# மோ. சைக்கிளில் குண்டு வெடிப்பு; ஸஹ்ரான் குழுவினரே காரணம்

## காத்தான்குடி பொலிஸ் நிலைய முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரி சாட்சியம்

கொழும்பு, ஜூலை 8

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுக்கு முன்னர், கடந்த 2019 ஏப்ரல் 16 ஆம் திகதி காத்தான்குடியின் பாலமுனைப் பகுதியில் உள்ள தோட்டத்தில் மோட்டார் சைக்கிளில் குண்டு ஒன்று வெடிக்கச் செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் ஸஹ்ரானின் குழுவினரே உள்ளனர். ஆரம்பக்கட்ட விசாரணைகளைத் தொடர்ந்து இரு நாள்களுக்குள்ளேயே அதைக் கண்டுபிடித்தோம் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் மொஹம்மட் ஜெகூலி தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் இருந்து பல கிலோமீற்றர் தூரத்திலேயே அந்தத் தோட்டம் அமைந்திருந்தது. நாம் அந்த இடத்தை அடைந்து வெடிக்கச் செய்யப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைப் பார்வையிட்டோம். நான் 25 வருடங்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையில் சேவையாற்றியவன். வெடிபொருள் தொடர்பில் பயிற்சி பெற்றவன். எனவே அதனை பார்த்ததும் வெடிபொருள் கொண்டு மோட்டார் சைக்கிள் வெடிக்கச் செய்யப்பட்டமை தெரிந்தது. நான் விடயத்தை உடனடியாக பொலிஸ் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆரச்சியிடம் கூறினேன். அவர் மேலதிகாரிகளுக்கு அறிவித்தார். மறுநாள் காலை 8.30 மணியளவில் அங்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்தோம். அப்போது, வெடித்த மோட்டார் சைக்கிளின் செசி இலக்கத்தை எம்மால் அங்கிருந்த எச்சங்களில் இருந்து அடையாளம் காண முடிந்தது. அதனை மோட்டார் வாகன பதிவுத் திணைக்களத்துக்குக் கொடுத்து வெடிக்க வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் இலக்கத்தைக் கண்டறிந்தோம். அது டப்ளியூ.பி.பி.சி.கியூவ். 0304 எனும் ஹொண்டா டியோ ரக இளம்பச்சை நிற ஸ்கூட்டி மோட்டார் சைக்கிளாகும். அதன் பதிவு உரிமையாளரைத் தேடினோம். அப்போது அந்த மோட்டார் சைக்கிள் களனி பகுதியைச் சேர்ந்த நில்மினி ஜயகொடி என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அவரிடம் விசாரித்தபோது, அவர் தனது நண்பரான துஷார பிரியந்த என்பவர் ஊடாக அந்த மோட்டார் சைக்கிளை அருண விக்ரமசேன எனும் மோட்டார் சைக்கிள் விற்பனை யாளர் ஒருவருக்கு விற்றுள்ளமை தெரிய வந்தது.

அவரிடம் சென்று விசாரணை நடத்தியபோது, ஜராட்யசிந்த சில்வாஎன்பவரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி கொடுக்கப்பட்டு அந்த மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை தெரியவந்தது. ஜராட்டை நாங்கள் விசாரித்த போது அவரது பணப்பையுடன் தேசிய அடையாள அட்டை தொலைந்து போயுள்ளமை தெரிய வந்ததுடன், அவரது அடையாள அட்டையில் சிம் அட்டைகள் பெறப்பட்டு அவற்றை ஸஹ்ரான் குழுவினர் பயன்படுத்துவது தொடர்பில் அப்போதும் சி.ஐ.டிக்கு அவர் வாக்கு மூலம் கொடுத்துள்ளமை தொடர்பிலும் தெரியவந்தது. இவ்வாறான நிலையில் இந்த மோட்டார் சைக்கிள் வெடிப்புச் சம்பவத்துடன் ஸஹ்ரான் குழுவினர் தொடர்புபட்டுள்ளமையை நாம் கண்டறிந்தோம் - என்றார். (ஐ)

# மஹிந்தவுடன் இணையுமாறு பிரபாகரன் சொன்னாராம்

## புதுக்கதை விடுகிறார் கனகர்

முல்லைத்தீவு, ஜூலை 8

இனி போராட்டம் சரிவராது இந்த அரசுடன் இணைந்து மக்களுக்கு உதவிசெய்யுங்கள் மக்களின் அபிவிருத்தியை முன்னெடுங்கள் என்று முள்ளிவாய்க்கால் இறுதிப் போர் நடைபெற்ற காலத்தில் விடு தலைப் புலிகளின் தலைவர்கள் என்னிடம் சொன்னார்கள். அந்த ஒரு சொல்லின் படிதான் நான் அரசுடன் இணைந்தேன். இது எனது அடி நெஞ்சில் இப்பொழுது ஆழமாக இருக்கின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வன்னிமாவட்ட வேட்பாளருமான ச.கனகரத்தினம் தெரிவித்தார். இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

போராட்ட காலகட்டத்தில் என்னை மக்கள் ஆதரித்து எனக்காக வாக்களித்தார்கள். அந்தக் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்பாளராகப் பணிசெய்தேன். அவர்கள் பாதுகாப்பில் இருந்து எல்லாம் செய்தார்கள். அன்று நான் முடிவெடுத்தேன் தனியாக நின்று அரசியலுக்குள் சென்றுதான் எங்கள் மக்களைக் காப்பாற்றவேண்டுமென்று. அது இன்று பலித்துள்ளது. இதற்கு மக்கள் முழு ஆதரவு தரவேண்டும். வன்னி மாவட்டத்தில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அவர் அரசுடன் நிற்கும் தமிழராக இருக்கவேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். போராட்டத்துக்குப்பின்னர்வன்னி மக்கள் கடும் வறுமையில் இருக்கின்றார்கள். வறுமையைப் போக்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனை எதிர்வரும் ஓகஸ்ட் 05 ஆம் திகதி எடுத்துக் காட்டுங்கள். இறுதிவரையும் மக்களுடன் மக்களாக வாழ்ந்து மக்ளோடு வெளியேறி எட்டு மாதங்கள் சிறையில் இருந்தேன். நான் செய்த தவறு மக்களோடு மக்களாக நின்றதுதான். - என்றார். (ப-19)

# பத்து ஆண்டுகளுக்கு கோத்தாவே ஜனாதிபதி

## அடித்துக் கூறுகிறார் மருதுபாண்டி ராமேஷ்வரன்

மட்டக்களப்பு, ஜூலை 8

இன்னும் 10 ஆண்டுகளுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே தொடரும். அந்த ஆட்சியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பங்காளிக்கட்சியாக இருந்து மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்கும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தலைவர் இருக்கின்றபோது கட்சிபேதமின்றி மலையகத்தில் பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுத்தார். அவரின் மகன் ஜீவன் தொண்டமான் இன்று தலைமை யேற்றுள்ளார். அவரின் தலைமையின் கீழ் தேர்தலில் போட்டியிடுகின்றோம். இந்த நிலையில் இ.தொ.காவைப் பலப்படுத்துவதற்காகவும், ஜீவனுக்காகவும் இளைஞர் கூட்டம் திரள்வதைக் காணக்கூடியதாக உள்ளது. பெருமளவான மக்களும் எமது கூட்டங்களில் பங்கேற்கின்றனர். இது மகிழ்ச்சியளிக்கின்றது. ஏனெனில் கட்சியில் இணையாவிட்டாலும் பரவாயில்லை, மலையகச் சமூகமாக எல்லோரும் ஒன்றாக இருங்கள் என எமது தலைவர் கூறினார். அந்த ஒற்றுமையைத் தற்போது காணமுடிகின்றது. ஜனாதிபதித் தேர்தலின்போது மலையக மக்களுக்காக எமது தலைவரால் முன்வைக்கப்பட்ட அனைத்துக் கோரிக்கைகளையும் ஜீவன் தொண்டமான் தலைமையில் நிச்சயம் நிறைவேற்றுவோம்.

அடுத்துவரும் 10 ஆண்டுகள் கோத்தாபய ராஜபக்ஷவே ஜனாதிபதியாக இருப்பார். அவர் தலைமையிலான அரசாங்கமேசெயற்படும். அந்தக் கூட்டணியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் பங்காளிக்கட்சியாக இருக்கின்றது - என்றார். (ப-150)

# முன்னணியின் பரப்புரையை குழப்ப படைத்தரப்பு மும்முரம்

## சுகாஸ் குற்றச்சாட்டு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பரப்புரைகளை குழப்பியடிக்க படைத்தரப்பு முற்பட்டுள்ளது. தமக்குத் தேவையானவர்களை வெல்ல வைக்கவும் அதே வேளை எம்மை முடக்கவும் சதிகள் பின்னப்படு கின்றன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் கனகரத்தினம் சுகாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த சனிக்கிழமை முன்னணியின் தலைமையகம் மற்றும் வட்டுக்கோட்டை அலுவலகம், நல்லூர் அலுவலகம் ஆகியன படையினராலும் இலங்கை பொலிஸாராலும் முற்றுகைக்குள்ளானது. இம்முற்றுகையை கரும்புலிகள் தினத்துக்கான முற்றுகையாக நாங்கள் கருதவில்லை. ஒருபுறம் சுதந்திரக்கட்சியின் வேட்பாளரான அங்கஜன் இராமநாதனை வெற்றி பெறவைப்பதற்காகவும் இன்னொருபுறம் முன்னணியின் பிரசாரங்களை முடக்குவதன் மூலம் எத்தகைய நோக்கத்துடன் நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றதென்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவுமே படைத்தரப்பு இவ்வாறு செயற்படுகிறது - என்றார். (ப-20)

# ரவிராஜ் விட்டுச்சென்ற பணியைத் தொடர்வேன்

## சசிகலா ரவிராஜ் தெரிவிப்பு

கொடிகாமம், ஜூலை 8


எனது கணவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதை இலட்சியமாகக்கொண்டு எனக்கு கிடைத்தசந்தர்ப்பத்தை தகுந்த முறையில் பயன்படுத்தி உங்களுக்குச் சேவையாற்ற வந்துள்ளேன் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வேட்பாளர் திருமதி சசிகலா ரவிராஜ் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு புத்தூர்ச்சந்தியில் அமைந்துள்ள மீசாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வேட்பாளர் திருமதி சசிகலா ரவிராஜ் மேலும் தெரிவித்ததாவது;

எனது தாய் மண் தென்மராட்சி சார்பாகப் போட்டியிடு கின்றேன். நீண்ட இடைவெளியை நிரப்புவதற்காகவும் எனது கணவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதை இலட்சியமாகக் கொண்டும் எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை தகுந்த முறையில் பயன்படுத்தி உங்களுக்குச் சேவையாற்ற வந்துள்ளேன். இந்தச் சந்தர்ப்பத்தை நான் சரியாகப் பயன்படுத்துவேன். இந்தச் சந்தர்ப்பம் எனக்காக மட்டும் அல்ல. அது உங்களுக்காகவும், இந்த தென்மராட்சி மக்களுக்காகவும், இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும், எமது கட்சியைப் பலப்படுத்துவதற்காகவும் இருக்கவேண்டும் என நம்புகிறேன். முதல் நிலையில் எமது தமிழ் அரசுக் கட்சி பலப்பட வேண்டும். ஒரு பெண்பிரதிநிதியால் முடியும் என்றால் எல்லாப் பெண்களுக்கும் ஒரு பெருமை தரக்கூடியதாகவே அமையும் - என்றார். (ப-159)

## மரண அறிவித்தல்



பிறப்பு 20 . 03 . 1965

இறப்பு 07 . 07 . 2020

### சிவகணநாதன் சிவசாந்தசீலன்

**(ஓய்வு பெற்ற லிகிதர், விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி)**

வவுனியா செட்டிக்குளத்தைப் பிறப்பிடமாகவும் இல. 03 ஜயனார்கோவில் வீதி, வண்ணார்ப்பண்ணை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சிவகணநாதன் சிவசாந்தசீலன் நேற்று( 07.07.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகணநாதன் மற்றும் தவமணிதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம்(அருச்சுனர்) மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் உமாறஞ்சினியின் அன்புக் கணவரும் கலைவாணண் (Civil Engineer Sanken Constructions), திலக்ஷனா (B.B.A), டனார்த்தனன் (HNDE - BCAS) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தணிகைச்செல்வியின் அன்பு மாமானரும் சிவசத்தியசீலன், சிவசற்குணசீலன், மதுரட்ணேஸ் வரி, ஜெயகாந்தசீலன், புவனரட்ணேஸ்வரி, காலஞ்சென்ற விமலரட்ணேஸ்வரி மற்றும் கேதீஸ்வரி, திருவேந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரரும் தயாபரன், தமிழ்ச் செல்வன், மதிவதனி, காலஞ்சென்ற தமிழ்வாணண் மற்றும் சுயாதினி , ஜெயதீபன், வாகீசன், தசந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கண்ணன் (நோர்வே), நித்தியானந்தன் (பண்ணாகம்) ஆகியோரின் சகலரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2020) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களு-க்காக வண்ணார்பண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**

**021 222 8690**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 11 . 1941

மறைவு 07 . 07 . 2020

### மயில்வாகனம் இராசலட்சுமி
### (ராசாத்தி)

வண்ணார்பண்ணை அரசடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் இராசலட்சுமி நேற்று (07.07.2020) செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், கிருஷ்ணராஜ் (கண்ணன்), அரவிந்தன் (இலங்கை மின்சாரசபை - யாழ் அலுவலகம்), மயூரன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான விஜயலக்சுமி, ஜெயலக்சுமி மற்றும் பராசக்தி, செல்வராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சோபிகா, மேனகாந், சுமதி, நிவோஜா, சுரேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமியும், புஸ்பராணி, காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், நாகராஜா ஆகியோரின் மைத்துனியும், அஸ்விதா, அஜிஷ், பாரதிகா, கஜனிகா, யசிகா, ஆதவ், ஆகியோரின் பேர்த்தியும், ரேணுகாவின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (08.07.2020) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம் பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, அரசடி ஒழுங்கை,
தட்டாதெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 607 9112, 077 597 0410**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த (21. 06. 2019) வெள்ளிக்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர்
### செல்லையா சிவலிங்கம்



அவர்களின் முதலாம் ஆண்டு நிகழ்வு இன்று (08.07.2020) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ் விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 01.10.1951

மறைவு 21.06.2019

இல.55, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077376 8952

மைதிலி நகை மாடம் (Pvt)Ltd
யாழ்ப்பாணம்.

(m.13154) (13.17)

## ஆலங்குற்றிகள் விற்பனைக்கு
ஆலமரத் தடிகள், குற்றிகள் விற்பனைக்குண்டு.
**077 253 0865**

## பெண் பணியாளர் தேவை
**Photoshop** தெரிந்த பெண் பணியாளர் ஒருவர் தேவை.
**Roy Digital**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
T.P. No:- 077 728 5794, 077 959 1023

## மணமகள் தேவை
கிளிநொச்சி, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1991 இல் பிறந்த நட்சத்திரம் பூராடம் 3 ஆம் பாதம், இராசி தனசு மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. மணமகன் சொந்தமாக தொழில் செய்கின்றார்.
**077 344 9443**

## விற்பனை பணியாளர்கள் தேவை
ஹாட்வெயர், உணவு, பொருள்களை விநியோகம் செய்வதற்கு (ஆண்/பெண்) பணியாளர்கள் (முழுநேர / பகுதிநேர) பைக் லைசன்ஸ் உடன் தேவை.
+ 947 5076 6979 (Whatsapp, Viber)

## வாடகைக்கு
நல்லூர் பிரதேசத்தில் 3 அறைகளுடன் கூடிய தனி வீடு வாடகைக்கு (1500Sq.ft) தனியார் வர்த்தக நிறுவனங்களுக்கு மட்டும். தரகர் வேண்டாம்.
**077 022 1170**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்
செல்வி
**பத்மாவதி சுப்பிரமணியம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலை சமூகம்
யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(cs.32863) (13.17)

## ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com
450/=

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
# மரண அறிவித்தல்

## சின்னத்துரை குகேந்திரன்
(Build Mart Enterprises - உரிமையாளர்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், நாவலர் வீதியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை குகேந்திரன் (06.07.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு காமாட்சிபிள்ளை தம்பதியரின் ஆசை மருமகனும், உதயகுமாரியின் அன்புக் கணவரும், சிவசண்முகியின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ராஜகஸ்தூரி, தங்கமலர் ஆகியோரின் பாசமிகு மருமகனும், சித்திரா (ஜேர்மனி), சுபத்திரா (லண்டன்), சுசித்திரா (ஜேர்மனி), யசோதரா (லண்டன்), சிவபாலன் (சிவா-லண்டன்), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, இலங்கை நாயகி, காலஞ்சென்ற ஜெயலட்சுமி, சரோஜினிதேவி ஆகியோரின் ஆசை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**639/8, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 604 8876, 021 222 9766**

**தகவல்:
குடும்பத்தினர்.**

## யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை)
### புதிய மாணவர்களை அனுமதித்தல் - 2020/2021
13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி (தொழில் கல்வி) நிகழ்ச்சித் திட்டம்

யா/மானிப்பாய் இந்துக்கல்லூரியின்
13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்கு
புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான
**விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.**
**இவ் விண்ணப்பப்படிவத்தினை பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.**
**விண்ணப்பமுடிவுதிகதி :- 15.07.2020**
அதிபர்
(cs 15161) (13.17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**மாணிக்கம்
தனபாலசிங்கம் (மாஸ்ரர்)**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 . 08 . 1948 | 08 . 06 . 2020 |

ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவுகள்
என்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**
347, முஸ்லீம் வீதி,
யாழ்ப்பாணம்.
(J.11060) (13.17)

## முகாமைத்துவ மற்றும் வணிக கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

**நுண்நிதி டிப்ளோமா**
**இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2018/2019**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, முகாமைத்துவ மற்றும் வணிக கற்கைகள் பீடத்தினால் நடத்தப்பட்டுவரும் நுண்நிதி டிப்ளோமா கற்கை நெறிக்குரிய மேற்படி பரீட்சையின் நேர அட்டவணை பின்வருமாறு மீளமைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம். மேலதிக விபரங்களுக்கு
http://www.maco.jfn.ac.lk/.

| திகதி | பாட அலகு இலக்கம் | பாடம் | நேரம் |
|---|---|---|---|
| 11.07.2020 சனிக்கிழமை | DMF 1231 | நுண்நிதி நிறுவனங்களின் மனிதவள முகாமைத்துவம் | 09:00 am – 12:00 noon |
| 11.07.2020 சனிக்கிழமை | DMF 1232 | வியாபாரப் புள்ளிவிபரவியல் | 01:30 pm – 04:30 pm |
| 12.07.2020 ஞாயிற்றுக்கிழமை | DMF 1233 | நுண்நிதி நிறுவனங்களின் விழுமியங்களும் கூட்டாண்மை நல்லாட்சியும் | 09:00 am – 12:00 noon |
| 12.07.2020 ஞாயிற்றுக்கிழமை | DMF 1234 | உற்பத்திப் பொருட்களின் அபிவிருத்தியும் செயற்பாட்டு ஆபத்து முகாமைத்துவமும் | 01:30 pm – 04:30 pm |
| 18.07.2020 சனிக்கிழமை | DMF 1235 | தொழில் திட்டமிடல் | 09:00 am – 12:00 noon |
| 18.07.2020 சனிக்கிழமை | DMF 1236 | நுண்நிதி நிறுவனங்களுக்கான செயற்திறன் மதிப்பீடு | 01:30 pm – 04:30 pm |
| 31.07.2020 வெள்ளிக்கிழமை | DMF 1247 | செயற்றிட்ட அறிக்கை | (பிற்பகல் 4 மணிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்) |

பதிவாளர்
(in.13163) (13.17)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 . 05 . 1933 | 08 . 07 . 2010 |

**அமரர் பிலிப் சூசைப்பிள்ளை**
(முன்னாள் ஆசிரியர்)
(அநுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரி,
யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்)

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான் - யோவான் 11:25

பத்து வருடங்கள் பறந்தோடியும் பற்றும் பாசமும் வேதனையும்
நீங்கவில்லை எமைவிட்டு தரணிக்கீந்த எம் தந்தையை தன்னகத்தே
மீட்டுவிட்டார் இறைவன் தடயங்கள் நாம் அவர் பாதவழி நோக்கி
தத்தளிக்கின்றோம் தினமும் இறையடி நின்றெமை ஏங்க வைக்கும் அப்பா
இறையருள் பெற்றெமைக் காத்திடுவீர் என்றும்
இதயத்துள் என்றும் பாசமுடன் இணைந்துள்ளீர்கள் அன்புருவாய்
இறைஞ்சுகின்றோம் தினமும் தங்கள்
இறை பாத மிணைந்த ஆன்ம வாழ்வுக்காய்

**குடும்பத்தினர்**
**0019052011589**
(CS 1423) (13.17)

## விடத்தற்பளை


# தனிமைப்படுத்தல் மையத்துக்கு 201 பேர் வருகை

கொடிகாமம், ஜூலை 8
கொடிகாமம் விடத்தற்பளை 522ஆவது படைப்பிரிவு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை இரவு தனிமைப்படுத்தலுக்காக 210 பேர் கொண்டு வரப்பட்டனர்.
வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த 68 பெண்களும் 142 ஆண்களும் தனிமைப்படுத்தலுக்காக விடத்தற்பளை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டனர்.
ஒரே இடத்தில் இருப்பதால் அவர்கள் மிகவும் மனச் சோர்வு அடைந்து காணப்படுவதால் அவர்களின் மனமாற்றத்துக்காக விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த 103 பேர் கடந்த வாரம் தொடர்ந்தும் மதவாச்சி பூநேவ கடற்படை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு இடம் மாற்றப்பட்டனர். தனிமைப் படுத்தல் நிலையத்தில் யாருமே இல்லாமல் இருந்த நிலையில் மீண்டும் நேற்று 210 பேர் கொண்டுவரப்பட்டுள்ளனர். (எ-159)

## ஏல விற்பனை

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் பழுதடைந்த நிலையில் உள்ள **2 T.V** ஏலத்தில் எதிர்வரும் 10.07.2020 விடப்படவுள்ளது.
09.07.2020 அன்று முற்பகல் 7.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை பார்வையிட முடியும்.
-அதிபர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் நடேசு பாக்கியம்**

அன்னை மடியில் 16.05.1941
இறைவன் அடியில் 08.06.2020


எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாயிருந்து
ஆதரித்த அன்புத் தெய்வமே!
எங்கள் உள்ளங்களில் நீங்கள் நினைவாய்
நின்று வழிகாட்டுவீரே!

கடந்த 08.06.2020 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல உதவிகளையும் முன்வந்து உதவிய அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகளை நவில்கின்றேன்.

அம்மா உம் பிரிவால் துயருற்றிருக்கும்
மகன் - உதயகுமார் (குமார்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 . 12 . 1955



மறைவு 08 . 06 . 2020

**அமரர் செல்லத்துரை தங்கராசா**

விழிகளில் நீர் வலிகள் ஆயிரம்
வாசலில் காத்திருந்தோம் – அப்பா
உங்களை மீட்பதற்கு
ஆனாலும் முடியவில்லை – அப்பா
மறையாத ஞாபகங்களுடன்
மௌனமாக அழுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தர்மக்கேணி,
பளை.
குடும்பத்தினர்
077 9264 995

# இராணுவ மயமாக்கலை நினைவூட்டும் செயலணி

## யஸ்மின் சூக்கா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 8
ஜனாதிபதி செயலணிகளின் உருவாக்கம் 'செயலணி' என்ற பெயர் இராணுவ மயமாக்கலை நினைவூட்டுவதாக அமைந்திருப்பதாக சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.
இவை அதிகாரத்தை ஒன்றுகுவிப்பதுடன் ஏற்கனவே அதிகளவான அதிகாரத்தை அனுபவித்துவரும் ஜனாதிபதியின் முக்கிய இராணுவ நண்பர்களுக்கும் மேலும் தடையற்ற அதிகாரத்தை வழங்குகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றத்தின் வழமையான கொள்கைகளையும் கடந்து, அதிகாரம் மிக்க இராணுவ மயப்படுத்தப்பட்ட செயலணிகள் ஊடாக தன்னாட்சி அதிகாரம் உடையவர் போன்று இலங்கையின் ஜனாதிபதி நாட்டை எவ்வாறு ஆட்சி செய்கின்றார் என்பதை வெளிப்படுத்தும் விதமாக ஒரு விளக்கப்படமொன்றை சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் வெளியிட்டிருக்கிறது.
அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இந்த அமைப்புக்கள் சரியான முறையில் மக்களால் தெரிவு செய்யப்படாதவை என்பதுடன், இவை சிவில் சேவையின் முழுமையான ஒத்துழைப்பு தேவைப்படும் ஜனாதிபதியின் நேரடியான பொறுப்பில் இருப்பதுடன், அவை நாடாளுமன்றத்தின் வழமையான ஆய்விற்கும் மேற்பார்வைக்கும் உட்படுவதில்லை.
செயலாளர்கள் மாத்திரமன்றி அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவைக் குழுக்கள் இந்த மக்களால் தெரிவு செய்யப்படாத அமைப்புக்களுக்குப் கீழ்ப்படிந்து பணியாற்ற வேண்டியிருக்கும். அவை அவ்வாறு செயற்படாவிட்டால் தமது தொழில்களுக்குக் குறிப்பிட்டுக்கூற முடியாத பின்விளைவுகளை ஏற்படுத்தும் விதமாக ஜனாதிபதிக்கு அவை குறித்து அறிவிக்கப்படும்.
அரசியல் யாப்பில் திருத்தம் செய்யக்கூடியதாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஜனாதிபதி பெற்றுக்கொள்வார் என்று நம்பப்படும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்கள் காரணமாக இது மேலும் கவலையடையச் செய்கிறது.
இந்த செயலணிகள் ஒரு சமாந்தரமான அரசை உருவாக்கும் ஆபத்தைக் கொண்டிருப்பதுடன் பெரும்பாலும் ஜனாதிபதி, அவரது குடும்பம் மற்றும் முன்னாள் இராணுவச் சகபாடிகளுக்கு ஆதரவு வலையமைப்புக்கள் மற்றும் பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான இணையற்ற அதிகாரத்தை வழங்குகிறது.
செயலணிகளின் உருவாக்கமானது சட்டரீதியாகக் கேள்வி எழுப்பக்கூடியதாகவும் நிர்வாக ரீதியாக இருண்டதாகவும் உள்ளதாக இலங்கையிலுள்ள வழக்கறிஞர்கள் கூறியிருக்கின்றனர்.
இந்த அமைப்புச் செயலணிகளுக்குக் கால எல்லை இல்லை என்பதுடன் அதற்கான வரைவு ஒழுங்கற்றதாகவும், 'செயலணி' என்ற பெயர் இராணுவ மயமாக்கலை நினைவூட்டுவதாகவும் அமைந்திருக்கின்றது. என்றுள்ளது. (எ)

## மணவாளக்கோல சங்காபிசேகம்

கொடிகாமம், ஜூலை 8
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் முதலாய கோவில்கள் மணவாளக்கோல சங்காபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. அடியார்கள் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து ஆசாரசீலர்களாக வந்து வழிபடுமாறு பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (த-159)

### தமக்கே...

யாத நிலைமையில் உள்ளனர்.
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரனின் வாக்காளர் பதிவு கொழும்பு மாவட்டத்திலேயே காணப்படுகின்றது. அதேபோன்று அவரது கட்சியில் போட்டியிடும் மற்றொரு வேட்பாளரான தவச்செல்வம் சிற்பரனின் வாக்காளர் பதிவும் கொழும்பு மாவட்டத்திலேயே காணப்படுகின்றது.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் போட்டியிடும் வேட்பாளர் நடராஜா காண்டீபனின் வாக்காளர் பதிவும், மற்றொரு வேட்பாளரான மாரிமுத்து கணபதிப்பிள்ளையின் வாக்காளர் பதிவும் கொழும்பு மாவட்டத்திலேயே உள்ளது.
இதனால் இவர்கள் 4 பேரும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தமது வாக்கைச் செலுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

### ஆளும்...

தல்கள் ஆணைக்குழு உடன் விசாரணை நடத்தி அவற்றை உடன் தடுத்து வேண்டும். வடக்கில் அரச சார்பு கட்சிகளை வெல்ல வைப்பதற்காகவே தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களைப் படையினர் அச்சுறுத்துகின்றார்கள் என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.
இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.
இது தொடர்பில் 'உதயன்' பத்திரிகையிடம் நேற்றிரவு அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத் தேர்தல் சுதந்திரமாக நீதியாக நடைபெறத் தன்னாலான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவேன் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் அண்மையில் நடத்திய சந்திப்பின்போது உறுதியளித்திருந்தார். ஆனால், வடக்கின் நிலைமை மோசமாக இருக்கின்றது. இங்கு சுதந்திரமான நீதியான தேர்தல் நடைபெறுமா என்ற வினா எழுந்துள்ளது. தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களைக் குறிவைத்து இராணுவத்தினரின் அச்சுறுத்தல்கள் அதிகரித்தவாறு உள்ளன. இது தொடர்பில் ஜனாதிபதி உடன் கவனம் செலுத்த வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழுவும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (எ-22)

### மர்ம...

லுக்கு உள்ளாகியுள்ளன.
சருக்குப் புலி தாக்கி அவை இறந்தன என்று [illegible]தலில் கூறப்பட்டாலும், இத்தனை ஆடுகளை [illegible]ருக்குப் புலி தாக்கியிருக்க சாத்தியமில்லை என்[illegible]ம் சிறுத்தையின் தாக்குதலில் அவை இறந்தி[illegible]க லாம் என்று மக்கள் சந்தேகம் வெளியிடுகின்[illegible]ர். 14 ஆடுகள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்[illegible]. அவற்றில் மறி ஆடுகளும், கடா ஆடுகளும [illegible]0 ஆடுகள் உயிரிழந்துள்ளன.
சம்பவம் இடம்பெற்ற பகுதி மிருக மருத்துவ[illegible] மடைந்த ஆடுகளுக்கு சிகிச்சை அளித்தார்[illegible] ரிழந்த ஆடுகளை உரியமுறையில் அகற்று[illegible] அறிவுறுத்தல் வழங்கிச் சென்றார்.
அந்தப் பகுதியில் வாழ்வாதாரத்துக்காக ப[illegible]ம் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளமையால் [illegible]ங்கின் தாக்குதல் மக்களை அதிர்ச்சிக்குள்ளா[illegible]ளது. (ஒ,5,26

## வெலிக்கடைச்...

அதனையடுத்து அங்குள்ள 174 கைதிகளுக்கும் அவர் தொடர்புபட்டிருந்த கந்தகாடு போதைப்பொருள் மறுவாழ்வு நிலையத்திலிருந்த 450 பேருக்குமாக மொத்தம் 624 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்படவுள்ளது என்று இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று இனங்காணப்பட்ட இந்தக் கைதி கந்தகாடு போதைப்பொருள் மறுவாழ்வு நிலையத்திலிருந்து கடந்த 27ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். அவருடன் நெருங்கி செயற்பட்டவர்களென 450 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. நோயாளியுடன் நெருங்கிச் செயற்பட்டவர்களை தனிமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவருக்கு தொற்று எவ்வாறு ஏற்பட்டது என்று விசாரிக்கப்படுகின்றது என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

624 பேரில் 210 பேருக்கு நேற்று சோதனை நடத்தியபோதும் எவருக்கும் தொற்று ஏற்படவில்லைஎன்பது தெரியவந்தது. மேலும், பொலன்னறுவை கந்தக்காடு முகாமில் புனர்வாழ்வு பெறும் 474 பேர் மற்றும் பணிக்குழாமைச் சேர்ந்த 131 பேர் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வெலிசர கடற்படை முகாமிலிருந்த கடற்படையினருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதை அடுத்து சுமார் 800 க்கும் மேற்பட்ட கடற்படையினருக்கு தொற்று ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் சிறைச்சாலைக்குள் நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இதனால் பல கைதிகளுக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (த-ஒ.5)

## தமிழ்...

பொய்க்குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்.

இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திரா சில்வா தெரிவித்தார்.

"நாடாளுமன்றத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் வடக்கில் இராணுவப் பிரசன்னம் மிகமிக அதிகமான அளவில் உள்ளது. யாழ்ப்பாணத்தில் இந்த நிலை இன்னும் மோசமடைந்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வீடுகளுக்குத் தினமும் செல்லும் அரச புலனாய்வாளர்கள் வேட்பாளர்களையும் அவர்களது குடும்ப உறவுகளையும் ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தும் வகையில் நடந்துகொள்கின்றனர். வேட்பாளர்களைப் ஒளிப்படம் எடுக்கும் அரச புலனாய்வாளர்கள், தினமும் எங்கே போகின்றீர்கள், எங்கு பிரசாரக் கூட்டம் எனப் பெரும் நெருக்கடியையும் ஏற்படுத்துகின்றனர். அவ்வாறு புலனாய்வாளர்கள் ஒருபுறம் நெருக்கடியை ஏற்படுத்தும் அதேவேளை, இராணுவத்தினரும் அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர். வேட்பாளர்கள் பயணிக்கும்போது வீதிகளில் வழிமறிக்கும் படையினர், தேர்தல் பிரசுரம் இருக்கின்றதா, துண்டுப்பிரசுரம் கொண்டு போகின்றீர்களா என விசாரிக்கின்றனர். தேர்தல் பணியில் அலுவலர்களும் அவர்களுக்கு உதவியாக பொலிஸாருமே செயற்பட வேண்டிய நிலையில் படையினரின் நடவடிக்கைகள் அச்சுறுத்தலாகவுள்ளன" என்று முறையிடப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வேட்பாளர்களினால் இந்த முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இராணுவத் தளபதியிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கு மட்டுமல்ல முழு நாட்டின் பாதுகாப்புக்கும் அரச படைகளே பொறுப்பு. பாதுகாப்பு நடவடிகளுக்காக ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் 9 மாகாணங்களிலும் படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். இந்தநிலையில், எவரையும் அச்சுறுத்தும் விதத்தில் படையினர் செயற்படவில்லை. அதேவேளை, வடக்கில் தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களை அச்சுறுத்தும் வகையிலும் அரச படைகள் செயற்படவில்லை. பொதுத்தேர்தலில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்கள் உட்பட தமிழ் அரசியல்வாதிகள் ஆதாரங்கள் எதுவுமில்லாமல் படையினர் மீது பொய்க்குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர். இது அபகீர்த்தி ஏற்படுத்தும் செயல். எனவே, தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்புடன் நடக்க வேண்டும். குற்றச்சாட்டுக்களை ஆதாரங்களுடன் முன்வைக்க வேண்டும்-என்றார். (எ-22)

## ஆயுதங்களுடன்...

மணியளவில் வரணி மாசேரிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இராணுவம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள்களில் வந்த 7 பேரை மறித்தபோது அவர்களிடம் கோடரி, பொல்லுகள் மற்றும் சைக்கிள் செயின் என்பனவற்றை மீட்டதாகத் தெரிவித்து அவர்கள் 7 பேரையும் இராணுவம் கைதுசெய்தது. அவர்கள் பயணித்த 5 மோட்டார் சைக்கிள்களும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருள்களும் கொடிகாமம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் நீதிமன்றால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஒ.5,159)

## யாழ்ப்பாணம்...

புடைய சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒரு பெண் உள்ளிட்ட இருவர் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி இயக்கச்சிப் பகுதியில் உள்ளூர் வெடிகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது அது தவறுதலாக வெடித்து எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் முன்னாள் போராளி ஒருவர் அநுராதபுரம் மருத்துவமனையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அவரது மனைவி கைதாகியுள்ளார். இதேவேளை கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரும், பருத்தித்துறையைச் சேர்ந்த பெண் ஒருவரும், காயமடைந்தவருடன் தொலைபேசியில் உரையாடினர் என்று தெரிவித்து பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் அளவெட்டியைச் சேர்ந்த வைத்திலிங்கம் நிர்மலதாஸ் (வயது-38) என்பவர் கொடிகாமத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். காயமடைந்தவருடன் தொடர்பைப் பேணி வந்த குற்றச்சாட்டிலேயே இவரைக் கைது செய்துள்ளோம் என்று பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் கூறினர்.

இதேபோன்று தொடர்பைப் பேணியதாகத் தெரிவித்து, இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணிபுரியும் முன்னாள் போராளி ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ.5,6,26)

## நவாலி...

புதன்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் 1995 ஆம் ஆண்டு, ஜூலை 9 ஆம் திகதி அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்த பொது மக்கள் மீது நடத்தப்பட்டவிமானக் குண்டு வீச்சில் 65 பேர் கொல்லப்பட்டனர். 150க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருந்தனர்அதன் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளை வியாழக்கிழமை நினைவுகூரப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே நினைவேந்தலை தடுத்து நிறுத்த உத்தரவிடுமாறு பொலிஸார் மனுத் தாக்கல்செய்துள்ளனர்.

மனுவில், எதிர்வரும் 2020.07.09 ஆம் திகதி (நாளை) எம்.கே.சிவாஜிலிங்கமும் சுமார் 150 பேர் வரையான அவருடைய ஆதரவாளர்களும் மானிப்பாய் நவாலி தேவாலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளார்கள் என்றும் அந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாகப் பொது மக்களின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் குந்தகம் விளைவதுடன், தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான எல்.ரீ.ரீ.ஈ அமைப்பை எம்.கே.சிவாஜிலிங்கம் மீள் உருவாக்கம் செய்வதற்கு முற்படுகின்றார் என்றும் குறிப்பிட்டுள்ளதுடன், அவர்கள் தற்போதுள்ள கொரோனா தடுப்புச் சட்ட விதிகளுக்கும், நோய்த் தடுப்புத் தனிமைப்படுத்தல் சட்ட ஏற்பாடுகளுக்கும் முரணாகச் செயற்படவுள்ளனர் என்றும் குறிப்பிட்டு அந்த நிகழ்வைத் தடைசெய்யுமாறு கோரியுள்ளனர்.

இது விடயத்தில் கட்டளை வழங்குவதற்கு முன்னர் எம். கே. சிவாஜிலிங்கம் தரப்பினரின் விளக்கத்தைக் கேட்டறிவதற்காக நீதிமன்றம் உத்தேசித்துள்ளதாகவும், அதற்காக அவரை மல்லாகம் நீதிமன்றில் இன்று புதன்கிழமை மதியம் 12 மணிக்கு முன்னிலையாகுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பற்றிய அறிவிப்பு நேற்று செவ்வாய்க்கிழமை மாலை சிவாஜிலிங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. (த-ஒ.26)

## டக்ளஸின்...

அரசு உள்ளடக்கவில்லை.

இந்தச் செயலணி நியமிக்கப்பட்டபோது அதில் சிறுபான்மையினர் எவரும் உள்ளடக்கப்படவில்லை. அது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது. பலரும் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அது தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்குக் கடிதம் எழுதியிருந்தார். சில தினங்களுக்கு முன்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் மஹிந்த ராஜபக்ச, இந்தச்செயலணியில் சிறுபான்மையினப் பிரதிநிதிகளும் உள்ளக்கப்படுவார்கள் என்று கூறியிருந்தார்.

நேற்று இந்தச் செயலணி தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அரசால் வெளியிடப்பட்டுள்ளது. அந்தச் செயலணியில் அரசு ஏற்கனவே கூறியிருந்த பெரும்பான்மையினத்தவர்கள் மட்டும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புச் செயலர் கமால் குணரட்ண, எல்லாவல மேதானந்த தேரர், தொல்பொருள் பணிப்பாளர், காணிப் பணிப்பாளர் உள்ளடங்கிய 11 பேர் இந்தச் செயலணியில் உள்ளக்கப்பட்டுள்ளனர். (எ)

## சமுர்த்தி...

வீட்டில் இருந்தவர்கள் நித்திரையிலிருந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் சத்தம் கேட்டு விழித்த வீட்டார் மின்குமிழ்களை ஒளிரவிட்டபோது தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சமுர்த்தி அலுவலருடன் இருந்த தனிப்பட்ட முரண்பாடு காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று தமது முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5,20)

## கோகண்ண...

பய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ள செயலணியின் உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவ மேதானந்த தேரர் தெரிவித்தார்.

இராவணன் என்ற மன்னன் இலங்கையை ஆண்டான் என்பது வெறும் கட்டுக்கதை என்று சில தினங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த எல்லாவ மேதானந்த தேரர், தற்போது இந்துக்களின் புனித தலமான கோணேச்சரம், கோகண்ண விகாரை என்று புதிய குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தொல்பொருள் ஆய்வுகள் நடத்தவேண்டிய 2 ஆயிரம் இடங்கள் உள்ளன. வனப்பகுதிகளிலும் தொல்பொருள்கள் உள்ளன. இவை தேசிய மரபுரிமைகளாகும். அனைத்து விடயங்களையும் ஆய்வுக்குட்படுத்த வேண்டும். எனவே, செயலணியின் பணி எப்போது முடிவடையும் என்று உறுதியாகக் கூறமுடியாது. ஆனால், கூடியவிரைவில் செய்துமுடிக்குமாறே குறிப்பிடப்பட்டுள்ளது.

தொல்பொருள் என்பதை தேசிய மரபுரிமையாகக்கருதி அனைவரும் பாதுகாக்கவேண்டும். குறிப்பாக பொலன்னறுவையிலுள்ள சிவன்கோவில் எமக்குரியதல்லாவிட்டாலும் அதனை நாம் பாதுகாக்கின்றோம்.

கோணேச்சரம்கோவில்என்பதுகோகண்ண விகாரை என்றே கூறப்படுகின்றது. இதற்காக நாம் கோவிலை இடித்து விகாரை கட்டமாட்டோம். ஆனால், அந்தப் பகுதியில் பௌத்தர்களுக்குரிய தொல்பொருள்கள் இருந்தால் அவை பாதுகாக்கப்படவேண்டும். இதனை செய்தாலே போதும். எமது செயலணி தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளால் தவறான கருத்துக்கள் பரப்பட்டுவருகின்றன. என்றார். (ஒ.5,44)

# சச்சின் சாதிப்பார் என நினைக்கவேயில்லை

## வக்கார் யூனிஸ் தெரிவிப்பு



புதுடில்லி, ஜூலை 8
சச்சினை அறிமுக போட்டியில் ஆட்டமிழக்கச் செய்தபோது, கிரிக்கெட்டில் ஜாம்பவான் எனப் பெயர் எடுப்பார் என்று நினைக்கவில்லை என்று வக்கார் யூனிஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணிக்காக சுமார் 24 வருடங்கள் விளையாடியவர் சச்சின். ஒருநாள், டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவிப்பு, அதிக சதம், அதிக போட்டிகளில் விளையாடிய வீரர் என பல்வேறு சாதனைகளை அவர் படைத்துள்ளார். இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவான் எனப் புகழப்படுகிறார் சச்சின்.

1989 ஆம் ஆண்டு சச்சின் தனது 16 வயதில் பாகிஸ்தானுக்கு எதிராக கராச்சியில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் அறிமுகம் ஆனார். முதல் இன்னிங்சில் 15 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வக்கார் யூனிஸ் பந்தில் "க்ளீன் போல்ட்" முறையில் ஆட்டமிழந்தார். இரண்டாவது இன்னிங்ஸில் சச்சினை வக்கார் யூனிஸ் வீழ்த்தினார். அதில் சச்சின் 2வது பந்திலேயே ஓட்டம் எதுவும் பெறாது ஆட்டமிழந்தார்.

இது தொடர்பில் வக்கார் யூனிஸ் தெரிவித்துள்ளதாவது:

சச்சினை ஆட்டமிழக்கச் செய்தபோது கிரிக்கெட்டில் மிகப்பெரிய அளவில் பெயர் பதிப்பார் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லை. சச்சின் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான அணியில் இருந்து வந்ததால் ஒட்டுமொத்த அணியும் ஆர்வமாக இருந்தது.

சச்சினை நான் முதல்முறையாக பார்க்கும்போது, தற்போது கிரேட் சச்சினாக விளங்கும் அவர், அப்போது என்னை ஈர்க்கும் அளவுக்கு இல்லை. விளையாட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் பல வருடங்களாக அவர் செய்தவை அற்புதமானது. கிரிக்கெட்டில் இவ்வளவு பெயரைப் பதிப்பார் என்று நான் நினைத்துக்கூட பார்க்கவில்லை. ஆனால், கடின உழைப்பு அவருக்கு இந்தப் பெயரை வாங்கிக்கொடுத்துள்ளது.

கராச்சியில் நடைபெற்ற முதல் டெஸ்டில் அவரை நான் மிக விரைவாக வீழ்த்தினேன். 15 ஓட்டங்கள் எடுத்தாலும் சில ஆன் டிரைவ், ஸ்ட்ரெய்ட் டிரைவ்ஸ் ஷொட்டுகள் அற்புதமானவை. அந்தத் தொடரில் அவர் மிகப்பெரிய அளவில் ஓட்டங்கள் எடுக்கவில்லை. ஆனால் சியால்கோட்டில் அரைசதம் அடித்ததை குறிப்பிட்டாக வேண்டும். ஏனென்றால், ஆடுகளம் பச்சை புற்களால் நிறைந்து இருந்தது.

நாங்கள் டெஸ்டில் முடிவு கிடைக்க வேண்டும் என்பதால் க்ரீன் ஆடுகளத்தை தயார் செய்தோம். சச்சின் களம் இறங்கியபோது மூக்கில் பந்து தாக்கியது. அப்போது அவருக்கு 16 வயது. அதனால் ஒருமாதிரியாக இருந்தார். ஆனால் உறுதியாக இருந்தார். அவருடன் சித்து துடுப்பாட்டம் செய்து கொண்டிருந்தார். இருவரும் ஐந்து முதல் ஏழு நிமிடங்கள் எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

அதன்பின், சச்சின் பேட்டிங் செய்யத் தயாராகிவிட்டார். அதன்பின் அவருடைய கிளாஸ் துடுப்பாட்டம் மூலம் அரைசதம் அடித்தார். அப்போது ஏதோ சிறப்பான ஒன்றை செய்யப் போகிறார் என்பதை நாங்கள் தெரிந்து

# ரி-20 உலகக் கிண்ணத் தொடரை ஒத்திவைப்பதற்கு ஐ.சி.சி. முடிவு!

**புதுடில்லி, ஜூலை 8**
**ரி - 20 உலகக் கிண்ணத் தொடர் ஒத்திவைக்கப்படவுள்ளது. அது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஐ.சி.சியின் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், அதில் இது தொடர்பாக விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

ஐ.சி.சி. ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதியில் இருந்து நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை ஆஸ்திரேலியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றால் போட்டியை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. இரண்டு முறை ஐ.சி.சி. இது குறித்து




முடிவு எடுக்க முடியாமல் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிடுவதை ஒத்திவைத்திருந்தது. தற்போதுள்ள சூழ்நிலையில் ரி20 உலகக் கிண்ணத் தொடர் நடத்துவதற்கு சாத்தியம் இல்லை என்று ஆஸ்திரேலியா கிரிக்கெட் அமைப்பு தெரிவித்துள்ளது. அதனால் ரி-20 உலகக் கிண்ணத் தொடர் ஒத்திவைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, ரி-20 உலகக் கிண்ணத் தொடர் தள்ளிவைக்கப்பட்டால் அந்தக் காலக்கட்டத்தில் ஐ.பி.எல். தொடரை நடத்த இந்தியக் கிரிக்கெட் சபை திட்டமிட்டிருந்தது. (ரி2)

# உள்ளூர் வீரர்கள் 45 பேருக்கு ஆர்மீனியா அதிரடித் தடை!

யெரவன, ஜூலை 8
உள்ளூர் ஆட்டங்களில் முறைகேட்டில் ஈடுபட்ட கால்பந்து வீரர்கள், அலுவலர்கள், கழக உரிமையாளர்கள் என 45 பேருக்கு அதிரடியாக ஆயுள் காலத் தடை விதித்துள்ளது ஆர்மீனியா.

ஆர்மீனியா ஆசிய நாடானாலும், ஐரோப்பிய எல்லையில் உள்ளது. அங்கு கால்பந்து விளையாட்டுக்கு வரவேற்பு அதிகம். அதிகளவான கால்பந்துக் கழகங்கள் உள்ளன. இந்தக் கழகங்களுக்கு இடையே ஆண்டுதோறும் நடைபெறும் முதல் பிரிவு, இரண்டாம் பிரிவு கால்பந்து போட்டிகள் அந்த மக்களிடையே பிரபலமான போட்டிகளாகும்.

2 ஆவது பிரிவு போட்டிகளில் ஆட்ட நிர்ணய முறைகேடுகள் நடக்கின்றன என்ற முறைப்பாடுகள் தொடர்ச்சியாகக் கூறப்பட்டு வந்தன. ஆனால் அவை தொடர்பாக ஆர்மீனிய கால்பந்துச் சங்கம் அதிகம் ஆர்வம் காட்டாமல் இருந்தது.

எனினும் அண்மையில் நடந்த 2 ஆவது பிரிவுப் போட்டியில் லேகோமோடிவ் யெரவன் அணி மற்ற அணிகளான எப்சிவேன், அரகெட்ஸ், போர்பெடோ யெரவன், ஆகியவற்றுடன் மோதிய ஆட்டங்களின் முடிவுகள் 120:012, 18:92, 08:82 என்ற கோல்கள் வித்தியாசத்தில் இருந்தமை விமர்சனங்களை எழுப்பியது. இதைத் தொடர்ந்து 2 ஆவது பிரிவு போட்டிகள் இரத்துச் செய்யப்பட்டன. விசாரணையில் ஆட்ட நிர்ணய முறைகேடு நடந்தது உறுதி செய்யப்பட்டது. (ரி2)

# இளம் வீரர்களின் நம்பிக்கை செட்ரி

## பயிற்சியாளர் இகோர் பாராட்டு



புதுடில்லி, ஜூலை 8
இந்திய கால்பந்து அணியின் அணித்தலைவர் சுனில் செட்ரி தொடர்ந்து விளையாடுகின்றமை அணியில் உள்ள இளம் வீரர்களுக்கு உற்சாகத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தும் என்று பயிற்சியாளர் இகோர் ஸ்டிமாக் தெரிவித்துள்ளார்.

இந்திய கால்பந்து அணித்தலைவர் சுனில் செட்ரிக்கு 35 வயதானாலும், களத்தில் அவர் தொடர்ந்து உற்சாகமாகவும் துடிப்புடனும் விளையாடி அசத்தி வருகிறார். சர்வதேச போட்டிகளில் அதிக கோல் அடித்த இந்திய வீரர் என்ற பெருமைக்கு சொந்தக்காரர். இந்திய அணிக்காக 115 போட்டிகளில் விளையாடி 72 கோல் அடித்துள்ளார்.

அவர் ஓய்வுபெறப்போகிறார் எனத் தற்போது தகவல்கள் வெளியாகி வருகின்றன. அதில் உண்மையில்லை என்றும், இவ்வாறான வதந்திகள் தனக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறியுள்ளார் சுனில் செட்ரி.

சுனில் தொடர்ந்து விளையாடவேண்டும் என்று இந்திய கால்பந்து அணியின் பயிற்சியாளரான இகோர் ஸ்டிமாக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுனிலின் வேகமும், திறனும் அப்படியே உள்ளது. அவர் அணியின் மதிப்புமிக்க வீரர். அவர் அணியில் உள்ள இளம் வீரர்களுக்கு உந்து சக்தியாகவும், நேர்மறையான நம்பிக்கை தரும் வழிகாட்டியாகவும் விளங்குகிறார். அவரால் இளம் வீரர்கள் உற்சாகம் அடைகிறார்கள்-என்றார். (ரி2)

## பார்முலா 1 கார்ப் பந்தயம்

# ஹமில்டனுக்கு ஏமாற்றம்; பின்லாந்து வீரர் வெற்றி!

ஹெல்சிங்கி, ஜூலை 8
கொரோனா அச்சத்தால் கடந்த 3 மாதங்களாகத் தடைப்பட்டிருந்த இந்த ஆண்டுக்கான பார்முலா 1 கார்ப்பந்தயம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.


இந்தச் சீசனுக்கான முதல் பந்தயமான ஆஸ்திரியா கிராண்ட்பிரி அங்குள்ள ஸ்பில்பேர்க் ஓடுதளத்தில் நேற்று இடம்பெற்றது.

ரசிகர்கள் இன்றி கொரோனாத் தடுப்பு மருத்துவ பாதுகாப்பு நடைமுறைகளுக்கு மத்தியில் நடந்த இந்தப் போட்டியில் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் பங்கேற்றனர்.

முதல் வரிசையில் இருந்து புறப்பட்ட மேர்சிடஸ் அணி வீரர் வோல்டெரி போட்டாஸ் (பின்லாந்து) 306.452 கிலோமீற்றர் இலக்கை ஒரு மணி 30 நிமிடம் 55.739 செக்கன்களில் கடந்து வெற்றி பெற்றார்.

அவருக்கு 25 புள்ளிகள் கிடைத்தன. அவரை விட 2.7 வினாடி மட்டுமே பின்தங்கிய பெராரி அணியைச் சேர்ந்த சார்லஸ் லெக்லெர்க் (மொனாக்கோ) 2 ஆவதாகவும், லான்டோ நோரிஸ் (இங்கிலாந்து) 3 ஆவதாகவும் வந்தனர்.

எதிர்பார்க்கப்பட்ட 6 முறை சம்பியனான இங்கிலாந்தின் லீவிஸ் ஹமில்டன் 2 ஆவது இடத்தைப் பிடித்தார். ஆனால் அவரது கார் ரெட்புல் அணி வீரர் அலெக்ஸ் அல்பானின் கார் மீது மோதியதால் 5 வினாடி பெனால்டி விதிக்கப்பட்டது. இதனால் ஹமில்டன் 4 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டு ஏமாற்றத்திற்கு உள்ளானார். அடுத்த போட்டியும் இதே இடத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ரி2)



### மாஸ்க் அணியாதீர் என்று வலியுறுத்திய

# பிறேசில் அதிபருக்கு தொற்றியது கொரோனா

பிறேசில், ஜூலை 8
பிறேசில் நாட்டு அதிபர் ஜெய்ர் போல்சோனாரோ, கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளாகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகமே அச்சத்தில் இருக்கும்போது மக்கள் சமூக விலகலும் தேவையில்லை முகக்கவசமும் அணியத் தேவையில்லை சுதந்திரமாக நடமாடுங்கள் என்று கூறிவந்த நிலையிலேயே அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு கொரோனா தொற்று அறிகுறி தென்பட்டது. மருத்துவமனையில் பரிசோதனை மேற்கொண்டார். வெளியில் வரும்போது "என்னுடைய நுரையீரல் சுத்தமாக உள்ளது" என்று கூறினார்.

இந்தநிலையில், கொரோனா பரிசோதனை முடிவில் அவர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. என்றாலும் அவருக்கு லேசான அறிகுறி மட்டுமே இருப்பதாகவும், அவர் சிறப்பாக இருப்பதாக உணர்வதாகவும் அதிபர் மாளிகை தெரிவித்துள்ளது. (த)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம்
1983. அவிட்டம் 1 ஆம் பாதம். 7 இல்
செவ்வாய். கி.பவாம் 36¾
(அரச உத்தியோகம்) மணமகனுக்கு
பொருத்தமான அழகிய மணமகள்
தேவை. தரகர் இல்லை.
**076 121 2066**

**Hotel முகாமையாளர் தேவை**

(1) கிளிநொச்சியில் உள்ள
**Hotel, ரெஸ்ரோறன்ஸ்**
ஒன்றிற்கு தகுதி வாய்ந்த
**முகாமையாளர்** தேவை
1. மும்மொழி தேர்ச்சி அவசியம்
2. முன் அனுபவம்
3. கவர்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
மற்றும்
(2) வெயிற்றர்களும் தேவை.
**077 691 5521**

New Batch Start
**English**
Diploma / Spoken Eng
**British College**
of Higher Studies
021 222 4550, 076 2800 208
**Sirampiyady lane,
Stanley road, Jaffna.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
08
.
12
.
1970



மறைவு
05
.
07
.
2020

## செல்வநாயகம் ஜெயஸ்ரீ

யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் ஜெயஸ்ரீ அவர்கள் 05-07-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், செல்வநாயகம் தவமணி தம்பதிகளின் அன்பு மகனும், சோபா (லண்டன்) அவர்களின் அன்புக் கணவரும், Rick,Jack, Mike, Rebecca (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரூபன் (கொலண்ட்), குமார் (ஜேர்மனி), வனிதா (கொலண்ட்), லலிதா (கொலண்ட்), ரஞ்சனி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,விஜி (கொலண்ட்), உதயம் (ஜேர்மனி), ராபர்ட் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.07.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சென் மைக்கல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

**077 356 4758, 077 128 5400**

# சர்வதேச நீதிமன்றத்தை நாடிய சீனாவின் உய்குர் முஸ்லிம்கள்!

**பீஜிங், ஜூலை 8**
**சீனாவில் சிறுபான்மையின முஸ்லிம் பிரிவினரான உய்குர் முஸ்லிம்கள் தங்களுக்கு எதிரான அடக்குமுறைகளை எதிர்த்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடியுள்ளனர். சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான முதல் முறையான முயற்சி இது என்று நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**



கிழக்கு துருக்கிஸ்தான் புலம் பெயர் அரசு, மற்றும் கிழக்கு துருக்கிஸ்தான் தேசிய விழிப்புணர்வு இயக்கம் ஆகிய அமைப்புகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சீனா மீது வழக்குத் தொடர்ந்துள்ளன.

ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு துருக்கிஸ்தான் பகுதிக்குள் தாஜிகிஸ்தான் மற்றும் கம்போடியாவிலிருந்து வரும் உய்குர் முஸ்லிம்களை நாடு கடத்துகின்றமை, சீனாவுக்கு திரும்புகையில் இவர்களை கடும் குற்றச்செயல்களுக்கு உட்படுத்துகின்றமை, அவர்களை கொலை செய்கின்றமை, சட்ட விரோத சிறை, சித்திரவதை, கட்டாய பிறப்புக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை, கட்டாயத் திருமணம் ஆகிய பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சீன கம்யூனிஸ்ட் கட்சி மீது சுமத்தப்பட்டுள்ளன. இதுதொடர்பாக 80 பக்க குற்றச்சாட் டுக்கள் சீன அதிபர் ஜி ஜின்பிங் உட்பட 30 சீன அதிகாரிகள் மீது முன் வைக்கப்பட்டுள்ளன. (ரி1)

# சக்திவாய்ந்த நிலநடுக்கம்

நியூயோர்க் ஜூலை 8
இந்தோனேசியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் 6.3 ரிச்டர் அளவுகோலில் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் வடக்கில் 142 கிலோ மீற்றர் தொலைவில் சிமாராங் பகுதியில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆகப் பதிவாகியது.

இந்த நிலநடுக்கத்தின் மையம் ஜேபாரா ஆகும். இதன் ஆழம் கடலுக்கடியில் 578 கிலோ மீற்றருக்குக் கீழே உணரப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் பாதிப்புகள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. சுனாமி எச்சரிக்கையும் இதுவரை விடுக்கப்படவில்லை. (ரி1)

## 27ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்
மகிழ
12
.
03
.
1941



கண்
நெகிழ
08
.
07
.
1993

அமரர்
**சிதம்பரி மகேந்திரம்**
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

ஆண்டிருபத்தேழாயிடினும்
ஆறவில்லை எம்துயரம்
ஆண்டாண்டு காலம்
அழுது புரண்டாலும்
மாண்டார் மீள்வதில்லை – என்ற
பட்டினத்தார் மொழிக்கு பழுதில்லை அவனியில்
மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தார் மாண்புகழ்
மனைவியாலும் மக்களாலும் மறந்திடத்தான் முடியுமோ?
மரித்தநாளை விரத நாளாக்கி
துதிக்கின்றோம் ஆண்டவனாய் உமையே!
ஆண்டவன் அடியிணையில் சாந்திபெற்றீர் – எம்
சந்ததி நலனுக்காகவும் அனுதினமும் அருள் தாருமே!
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

என்றும் நும் அன்பினில் குடியிருக்கும்.....
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.